# தொடரட்டும் பயணம்

அண்மைக்காலங்களில், (கடந்த இருபது - இருபத்தைந்து ஆண்டுகளாக) - மாலை நேரங்களில், நகரில் உள்ள பூங்காக்களில், நகர்ப்புற ரயில் நிலையங்களின் நீண்ட நடைமேடைகளில் (Platform) ஒரு காட்சியைக் காணத்தவறி இருக்கமாட்டீர்கள். அப்படி என்ன அது விசேஷமான காட்சி!

மாலை மணி நான்கு - நகர்ப்புறத்தில் உள்ள ஒரு ரயில் நிலைய நடை மேடை - ஒரு முதியவர் தளர்ந்த நடையுடன் நுழைகிறார். ஆவல் ததும்பும் கண்களால் எதையோ ஆர்வமாகத்தேடி தனக்கே உரித்தானது போன்ற ஓர் இருக்கையில் அமர்கிறார். சுற்றுமுற்றும் மீண்டும் சுழல்கிறது பார்வை. மணி 4-10, 4-15. ஒவ்வொரு திசையிலிருந்து ஒவ்வொருவராக - இருவர் இணையாக - ஒரு பத்துப்பேர் வந்து குழுமுகிறார்கள். உரையாடல்கள் துவங்குகின்றன. சில இடங்களில் இவர்கள் இரண்டு, மூன்று குழுக்களாகக் கூட பிரிந்து வெவ்வேறு இடங்களில் அமர்ந்து தங்கள் விவாதங்களைத் தொடர்வார்கள். இந்தக் காட்சிகள், அநேகமாக அனைத்து ஊர்களிலும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இதில் அப்படி என்ன விசேஷம் - இதற்கு என்ன முக்கியத்துவம் என்றுதானே வினவுகிறீர்கள்.

அங்கே நடக்கும் விவாதங்களில் - உரையாடல்களில் கலந்து கொள்ளலாமே! இதைப்படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் அந்தக் குழுக்களிலே ஓர் உறுப்பினராகக் கூட இருக்கலாம். உரையாடல்களை சற்று கவனிப்போமா?

அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சி முதல் நமது அடுக்களைப் பிரச்சனைகள் வரை பேசப்படும். அன்றைய செய்தித்தாள்களின் செய்திகளை வெவ்வேறு பரிமாணத்தில் உற்றுநோக்குவார்கள். சிற்சில நேரங்களில் நமது சட்டசபை - பாராளுமன்ற விவாதங்கள் போல் சூடேறி ஓரிருவர் சினத்தோடு வெளிநடப்பு செய்வதும் உண்டு.

அக்கணத்தில் - அந்த தருணத்தில் - அந்த சில மணித்துளிகளில் அனைத்துமே சாசுவதம் என்று நம்பிக்கையோடு கருத்து யுத்தம் செய்து கொண்டிருக்கும் அந்த கனவான்கள், தங்கள் கடிகாரங்களை அவ்வப்போது பார்த்துக்கொள்ளத் தவறுவதில்லை.

நகைச்சுவை, அதைத் தொடர்ந்து கள்ளமில்லா ஆரவாரச் சிரிப்பு - கொஞ்சம் வெறுப்பு - சினம் - இப்படி அனைத்து சுவைகளின் கலவையாக

அந்தப் பெரியவர்கள் ஒரு மணி – அல்லது இரண்டு மணிநேரம் பொழுதைக் கழிக்கின்றனர். சற்று ஆழமாக – கூர்ந்து கவனித்தால் அங்கே ஓர் வெறுமை – விவரிக்க முடியாத ஒரு சோகம் நிழலாடிக் கொண்டிருப்பதை உணரலாம்.

இப்போது அவர்கள் பிரியும் காட்சி!

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்த வண்ணம் பதை பதைத்து எழுகிறார் ஒரு பெரியவர். "டேய் சபேசா – இன்றைக்கு சரியான டோஸ்தான் – பேரனை ஸ்கூலிலிருந்து அழைத்துக் கொண்டு, அப்படியே காபிப்பொடி வாங்கி வருவதாக வந்தேன் – இந்தப் பேச்சு சுவாரஸ்யத்தில மறந்தே போய்விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே விரைகிறார் ஒரு முதியவர். ஓட்டமும் நடையுமாக, இத்தனை நேரம் இருந்த மகிழ்ச்சி எங்கோ மூலையில் ஒளிந்து கொள்ள, பேரனின் பள்ளிக்கூடம் நோக்கி விரைகிறார். என் அப்பனே! அருள் தா! என்னைக் காப்பாற்று – பேரன் இன்னும் பள்ளியிலே காத்திருக்க வேணும் என்று அலறாத குறையாக மனத்தின் ஓலம் ஆர்ப்பரிக்க ஓடுகிறார். ஏன் இந்த ஓட்டம்? ஏன் இந்தப் பயம்? அலசுவோம்.

பேரன் பள்ளியில்தான் இருந்தான். பெரியவருக்கு முகத்தில் நிம்மதி – வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார். "வாடா கண்ணா! டயம் ஆயிடுத்து – நல்லகாலம்" தாத்தாவுக்காக காத்து கொண்டிருந்து என்னைக் காப்பாத்திட்டடா, கண்ணா என்று கட்டிப்பிடித்துக் கொண்டார். பைகளை வாங்கிக் கொண்டார். வழியில் காபிப்பொடியையும், தவறாமல் வாங்கி வைத்துக் கொண்டார். இன்னும் அவர் முகத்தில் காணப்பட்ட பய உணர்வு அகலவில்லை. வீடு வந்துவிட்டது, வாசலிலேயே வரவேற்பு காத்திருந்தது.

"ஏண்டா இவ்வளவு லேட் – எந்தக் கடன்காரன் குறுக்கே வந்தான். என் எண்ணத்தை குலைக்கணுங்கிறதே ஒருத்தொருத்தருக்கும் தொழிலாயிடுத்தே. என் கர்மம்! இன்னைக்குத்தான், உன்னை அழைச்சிண்டு அந்தக் திருமண வரவேற்புக்கு போகணும்னு இருந்தேன். இன்னைக்கு பார்த்து தாமதமாக வர்றே! இப்பவே மணி ஆறாயிடுத்து இனி போன மாதிரிதான்! என்று பொரிந்து தள்ளினாள் மருமகள்".

"அம்மா ஏம்மா என்னைக் கோவிக்கிறே! தாத்தா இப்போதான் வந்தார். நான் ரெடியா உட்காந்திண்டிருந்தேன். என்ன தாத்தா சொல்லுங்களேன்? என்று குழந்தை குழறியது. திருவிழாவில் காணாமல் போன குழந்தை போல திருதிருவென விழித்தார் தாத்தா. ஓரக்கண்ணில், ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்த தன் சகதர்மிணியைப் பார்த்தார்.

அங்கே இருந்து புறப்பட்ட தீக்கணைகள் இரண்டும் இவரை சுட்டெரித்தன. பையனை அழைத்துக் கொண்டு மருமகள் உள்ளே சென்றாள். அம்மை, ஐயனுக்கு உபதேசம் செய்ய துவங்கினாள்."

"பொறுப்பில்லாமல் காலம் பூராவும் கழித்தாச்சு! ஏதோ நான் தான் எல்லாத்தையும் ஜீரணிச்சிண்டு நாற்பது வருஷமா குடித்தனம் நடத்தி ஒரு வழியா கரை சேத்தாச்சு. இப்போ, இவங்களை அண்டி வாழ்றமே, இப்பவாவது சிறிது பொறுப்பா நடந்துக்கப் படாதோ?" என்று நீட்டி முழக்கி ஒரு அர்ச்சனை செய்து தன் கண்களையும் கூடவே கசக்கி முடித்தாள்.

நம்மவர், ஒரு ஓரமாக ஒதுங்கினார் – ஒடுங்கினார் – இல்லை– இல்லை – ஓரங்கட்டப்பட்டார். ஆமாம். இந்த அவதிகளெல்லாம் நிஜமாக நடந்து கொண்டிருக்கின்றனவா? ஒரு சின்னப்பிழை, இப்படியெல்லாம் விபரீத உணர்வுகளை வெளிப்படுத்த காரணமாகிறதா? உண்மைதான்.

இங்கே விவரிக்கப்பட்ட சம்பவம் உண்மையானதுதான். இதே போன்று வெவ்வெறு மாதிரியான நிகழ்வுகள் – வெவ்வேறு வார்த்தை வெளிப்பாடுகள் – ஆனால் வெளிப்படுகிற உணர்வுகள் கசப்பானவை – அதிருப்தி அளிப்பவை என்பது நிஜம்தான்.

ஏன் இந்த நிலைமை – முதற்கண் இந்த சிறு தாமதத்திற்கு, இவர் ஏன் அஞ்சி நடுங்கவேண்டும். தாமதத்திற்காக, இவர் விமர்சிக்க பட்டதற்காக, இவர் ஏன் இவ்வளவு வருந்த வேண்டும். இதே அன்பர் – முதியவர் – இருபது ஆண்டுகட்கு முன் தன் இல்லத்தில் மிக முக்கியமான அலுவல்கள் நிகழ இருக்கும்போதும் – நிகழ்ந்து கொண்டிருக்கும்போது – நிகழ்ந்து முடிந்துவிட்டபோதும் வந்து கலந்து கொண்டபோது, இவர் பெரிதும் வரவேற்கப்பட்டார் – "இப்போதாவது உங்களால் வர முடிந்ததே" எனக் கொண்டாடப்பட்டாரே!

இவருக்குத் தரப்பட்ட அந்த முக்கியத்துவம் கால வெள்ளத்தில் கரைந்து போய் விட்டதா? ஆம்! காணாமல் போய்விட்டது. இதனை இந்தப் பெரியவர் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பெற்றுவிட்டால் – எதிர்பார்ப்புகளை – முக்கியத்துவம் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை, குறைத்துக் கொண்டு இக்கணத்தில் – இத்தருணத்தில் தன் உபயோகம் – தன் குறை நிறைகளை சீர்தூக்கும் நடு நிலை உணர்வை வளர்த்துக் கொள்வாரானால் அச்சமில்லை – ஏமாற்றமுமில்லை – வருத்தமோ – கவலையோ துளிக்கூடகிட்டே வராது. "இக்கணம் தன்நிலை உணர்தல்" என்று சொன்னேன் அல்லவா? எளிதல்ல தான். ஆனால் ஒரு சிறிய பயிற்சி மூலம் அதுவசப்படும்.

**"பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவர்க்கு
அணி அல்ல மற்றுப்பிற"** – குறள் 95


இது முதியோர்க்கு, மிக, மிகப் பொருந்தும், பணிவுடன், இன்சொல் பேசிப்பாருங்கள் – விரதம் மேற்கொள்ளுதல் போல் ஒரு நாள் – இரண்டு நாள் என பணிவும் – இன்சொல்லும் மட்டுமே உங்கள் வெளிப்பாடு என்று வைத்துக் கொண்டு பாருங்கள். பலன் பிரமிக்கத்தக்கதாக இருக்கும். முதியோராகிய நாம் கடைப்பிடிக்கத் தக்கதான ஒரு பட்டியல் – எளிதாக நினைவில் தங்கும். செயல்படுத்தலும் இயலும். இதோ:–

1. நிலுவையில் உள்ள கடன் சுமைகள்
2. அலட்சியப்படுத்திய குடும்பப் பொறுப்புகளில் முழுமையான அக்கறை.
3. அனைவரிடத்திலும் அன்பைச் சொரிதல்.
4. எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்ளுதல்
5. உணவை மருந்தாக்கிக் கொள்ளுதல்
6. நடைபயிலல், தியானம் ஓர் அன்றாடக் கடமை.
7. பிறரை உயர்த்துவதே பிறவியின் பயன் என உணர்தல்.

மரணமிலாப் பெருவாழ்வு பெற்றிட பெருமானார் சொன்னவற்றை நினைவு கூர்வோம்.

**மடிந்தாலும் பொய் கூறேன், மானுடற்கே
நலிவுமில்லை – சாவுமில்லை கேளீர், கேளீர்
நாணத்தைக் கவலையினைச் சினத்தை,
பொய்யை, அச்சத்தை, வேட்கைதனை,
அழித்துவிட்டால் அப்போது
சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின் சொல்வேன்
சினத்தை முன்னே வென்றிடுவீர்
மேதினியில் மரணமில்லை** – "வள்ளலார்"

நமக்கு, மரணமிலாப் பெருவாழ்வு அடைய முடியாத அரிய இலக்காக இருக்கலாம். ஆனால், அன்றாடம் மரணித்துக் கொண்டு இருக்கிறோமே, அதிலிருந்து விடுபடுவோம். **சினத்தை வெல்வோம்! பணிவை அணிவோம்.**



சிதம்பரம் நடராஜர் கோயிலின் தோற்றம்

**சினமுதல் அனைத்தையும், தீர்த்தெனை நனவிலும்**
**கனவிலும் பிரியாக் கருணை நற்றாயே**

# சான்றோர் வாழ்வில் சில நிகழ்வுகள்

(நம் நினைவுப்பெட்டகத்தில் நிலைத்து நிற்க வேண்டியவை)

1. அன்னை தெரசாவை அறியாதார் உண்டா இந்த அவனியில்! அடைக்குந்தாழ் இல்லாமல் அன்பையும் – கனிவையும் பிரவாகமாக வழங்கியவர்கள் அல்லவா இந்த தேவதைத்தாய்! இவர்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்வை சமர்ப்பிக்கின்றேன்.

அன்னை தெரசாவின் கல்கத்தா நகர மக்கள் சேவையின் தொடக்க காலம். மனமுவந்து நன்கொடை கொடுக்கும் வள்ளல்களை நாடி, பொருள் சேர்த்து, புறக்கணிக்கப்பட்ட – ஆதரவற்ற சிறுவர்களுக்கு ஒரு இல்லம் அமைத்து அவர்களை அன்போடு பராமரித்து வந்த ஆரம்ப நாட்கள்.

அன்னையின் கோரிக்கைக்கு இணங்கி பொருள் வழங்கியோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவந்தது. அப்படி பொருள் வழங்கிய ஒருவர் அபரிமிதமாக வழங்கி வந்தார். அன்னை அவரை உளமரா வாழ்த்தி தான் பெறாத குழந்தைகளை சிறப்பாக பேணமுடிகிறதே என மகிழ்ந்தார்.

திடீரென ஓர் நாள், ஒரு வழக்கறிஞரும், அவருடன் பத்து – பதினைந்து பேர் கொண்ட கும்பலும், கூச்சலும் – குழப்பத்துடனும் அன்னை நடத்தி வந்த காப்பகத்தினுள்ளே நுழைந்தனர். இந்த வன்முறை ஓலம், அன்னைக்கும் அவர் தம் உதவியாளர்கட்கும் எதிர்பாராத ஓர் அதிர்ச்சி.

வந்த வழக்கறிஞர், அன்னையயை நோக்கி கேட்கிறார், அன்னைக்கு அபரிமிதமாக பொருள் வழங்கி வந்த செல்வந்தர் பொருள் வழங்கி இருக்கிறாராமே ? உண்மையா ?

அன்னை அமைதியாகச் சொல்கிறார் ஆமாம் அவர் கொடுத்த தொகைகளையும் தயங்காமல் கூறுகிறார். வழக்கறிஞர், அன்னையை நோக்கி, அந்த செல்வந்தர் முறைகேடாக சம்பாதித்து – பலரை ஏமாற்றி சேகரித்த பணத்தைத் தங்களிடம் கொடுத்து வைத்திருப்பதாக எங்கட்கு தகவல், இவர்களெல்லாம், அவரிடத்தில் பணத்தை பறிகொடுத்தவர்கள். உங்களிடம் அந்தப் பணத்தை வசூல் செய்யவே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என விளக்கினார். அன்னையின் உதவியாளர்கள் அத்தனைபேரும் உறைந்து – விக்கித்து, சிலர் அழவும், தொடங்கினர். அருளுள்ளம் கொண்ட அன்னை, சற்றும் பதறாமல் ஆம் அவர் கொடுத்ததும் உன்மை நான் பெற்றுக்கொண்டதும் உண்மை. அவ்வளவும்

என்னிடம் தான் உள்ளது. அமைதியாக என்னோடு வாருங்கள் என காப்பகத்தின் உள்ளே விரைந்தார். அனைவரும் உடன் சென்றனர். உள்ளே உணவுக்கூடத்தில் ஒரு நூறு குழந்தைகள் அமர்ந்து உணவருந்திக் கொண்டு இருந்தனர்.

இதோ அவர் கொடுத்த பொருள் இங்கேதான் உள்ளது. உங்களுக்குச் சேரவேண்டியதை தாரளமாக எடுத்துச் செல்லலாம் என அன்னை சொல்லி முடித்ததும், நடப்பதை சற்று புரிந்து கொள்ளும் வயதுள்ள பெரிய குழந்தைகள்– மதர் எங்களை அனுப்பிவிடாதீர்கள். நாங்கள் உங்களை விட்டு எங்கும் போகமாட்டோம் எனக் கதறினர். சில வினாடிகளில் அத்தனை குழந்தைகளும் அன்னையைச் சுற்றி நின்று அழ ஆரம்பித்துவிட்டனர்.

இந்தக் காட்சியைக் கண்ட, ஆவேசத்தோடு உள்ளே வந்த அத்தனை பேரும் – கண்ணீர் மல்க வந்த வழியே அமைதியாகத் திரும்பிச் சென்றனர்.

அதனால்தான் உலக நாடுகள் அழைப்பு விடுத்தன பாஸ்போர்ட், விசா இல்லாமல்!

இது மந்திரமா? மாயமா? தொண்டர்கள் பெருமை சொல்லவும் பெரிதே!!

## காணாமல் போன காலணா!
## உண்ணாவிரதம் இருந்த மகாத்மா!!

1947 ஆகஸ்ட் 15ம் நாள், நம் நாடு சுதந்திரம் பெற்ற திருநாள். சுதந்திரம் பெற அரும்பாடுபட்டவர்களை வழிநடத்திச் சென்றவர் அகிம்சை அண்ணல் மகாத்மா. நம் அனைவருக்கும் தெரிந்த செய்திதான் இது.

நாடு சுதந்திரமடைய முக்கிய காரணமாக இருந்த பெருந்தகை அன்றைய தினம் எங்கே இருந்தார் என்பதை பெரும்பாலானோர் மறந்திருப்பர். சுதந்திரக் கொடியேற்றம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் நமது அண்ணல், மேற்கு வங்கத்தில் மதக்கலவர பூமியில் அமைதி யாத்திரை மேற்கொண்டிருந்தார். அந்த அண்ணலின் வாழ்வில் எத்தனையோ நிகழ்வுகள் அவற்றில் ஒன்று.

பிர்லா மந்திரில் மாலை வேளைகளில் நடந்திடும் பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா கலந்து கொள்வார். பிரார்த்தனைகள் முடிந்ததும், கூட்டத்தில் கலந்து கொண்ட தொண்டர்கள், தங்கள் சக்திக்கேற்ப ஏதாவது

சில்லறையை ஏழை, இயலாத மக்கள் நலனுக்காக அளிப்பது வழக்கம். அவ்விதம் சேகரிக்கப்படும் அந்தத்தொகையை எண்ணி, அப்போதே அண்ணலிடம் சொல்லிவிடுவார்கள். வாரம் ஒருமுறை சரிபார்ப்பது வழக்கம். அப்படி பார்க்கும் போது ஒருமுறை காலணாதானே, என்று சற்று அசிரத்தையாக பேச்சு நடந்தது, அண்ணலின் காதுகளில் விழுந்துவிட்டது. காலணா என்றாலும் அது ஏழைகளின் பணம். அதற்குக் காரணம் தெரியாவிட்டால் நான் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்து பரிகாரம் தேடுவேன் என்றாராம். காலணா என்ன நான்கு கோடி நாற்பது கோடிகளை காணோம் என்று கம்பீரமாக வலம் வருவோரைத்தான் இப்போது பார்த்துக கொண்டிருக்கிறோம்.

## தந்தை பெரியார் வாழ்வில் ஓர் நிகழ்வு

அப்போதெல்லாம் பொதுக்கூட்டம் நடந்தால், தொண்டர்கள், பிரமுகர்கள் பெரியாருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வது வழக்கம். இது வீணான செலவு எனக் கருதிய பெரியார், தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். உங்களால் முடிந்ததைப் பணமாகக் கொடுத்துவிடுங்கள். உபயோகமாக இருக்கும். தொண்டர்கள் அளிக்கும் பணத்தை, தங்கள் பெயரைச் சொல்லி தருகிற பணத்தையும் ஒலிப்பெருக்கியில் சொல்வார்கள்.

ஒருநாள், கூட்டம் முடிந்ததும், பெறப்பட்ட பணத்தை எண்ணி முடித்தவர் தொகையைப் பெரியாரிடம் சொல்கிறார். ஐயா! இன்று சேர்ந்தது இவ்வளவுதான் என்றார். நீங்கள் சொல்வது தவறு. சரியாக எண்ணினீர்களா? பதினாறு ரூபாய் குறைகிறதே என்றாராம்.

தூக்கிவாரிப் போட்டதாம் அங்கே இருந்தவர்கட்கெல்லாம். நிதானமாக எண்ணிப் பார்த்தனர். பெரியார் சொன்ன தொகைதான் சரியாக இருந்ததாம், எப்படி? என வியந்தனர். மேடையில் அமர்ந்த வண்ணம் தொண்டர்கள் ஒலிப்பெருக்கியில் சொல்கின்ற தொகையை கூட்டி கணக்கு வைத்துக் கொள்வாராம் பெரியார். என்ன நினைவாற்றல்! ஏழைகள் பணத்தின் மீது அவர்காட்டிய அக்கறை. மாமனிதர்களைப் போற்றுவோம். பின்பற்றுவோம்.

# அகல உழுதல் : போதாது ! ஆழ உழுதல் : அவசியம் ! மிக அவசியம் !!

"அகல உழுதலின் ஆழ உழுதல் சாலச் சிறந்தது", எனும் கூற்று பல நூற்றாண்டு கட்கு முன்னரே நமது ஆன்றோர்களால் உணரப்பட்டது, உரைக்கப்பட்டது.

இந்தக்கூற்று விளைச்சல் பெருக்கத்திற்கும் வேளாண்மை செழிப்பதற்காக மட்டுமே கூறப்பட்டது எனப் பொருள் காணுவது. அகல உழுவதற்கு ஒப்பாகும். இக்கூற்று, நமது மனம் என்னும் நன்னிலத்தை ஆழ உழுதால் விளைந்திடும் அமோக விளைச்சலைப் பற்றியதும் எனப் பொருள் காணுவதும் பொருத்தம் தானே !

இன்றைய நிலையில் நமது குடும்பம், நமது வாழ்க்கை முறை, நமது சுற்றுப்புறம், நமது சமுதாயம் நம்மைவழி நடத்தும் அரசாங்கம் என ஒரு எண்ணத் தொடரை கண்களை மூடிக் கொண்டு தியான நிலையில் மனத்திரையில் காட்சிகளாக ஓட விட்டேன் ! நீங்களும் சில நிமிடங்கள் செலவிட்டுப் பாருங்கள் !

பல நூற்றாண்டுகளாக, மாற்று மதத்தினராலும், வேற்று இனத்தவராலும், ஆன்மீகவாதிகளலும் பண்படுத்தப்பட்டவர்கள் நாம் பலகாலம் பின்னோக்கிச் செல்ல வேண்டும். கடந்த ஒரு நூற்றாண்டின் நிகழ்வுகளை மட்டும் ஆய்வு செய்வோம். கடந்த நூற்றாண்டு எத்தனை மாற்றங்களைக் கண்டு விட்டது !

அடிமைகளாக வாழ்ந்த நாம் அடிமைக் கூலிகளாக புலம் பெயர்ந்த நாம், அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம், (Independence) பெற்றோம் என்பதை விட தியாகச் செம்மல்கள் சிலரால் பிரசவிக்கப்பட்டோம். நாம் பெற்ற சுதந்திரம் இந்த சுதந்திரத்தைப் பெற அரும்பாடுபட்டவர்கள், அரிய பல தியாகங்கள் செய்தவர்கள், கொடுமையான இன்னல்களை ஏற்றவர்கள், இன்னுயிர் நீத்தவர்கள் என பல ஆயிரம் பேர், ஏன், சில இலட்சம் பேர் இருக்கலாம். அப்போதைய மக்கள் தொகை கணக்குப்படி நமது நாடு நாற்பது கோடி மக்களை கொண்டதாக இருந்தது.

சுதந்திரத்தின் மாண்பும் – முக்கியத்துவமும் புரிந்தவர்கள் ஆழ உழுதவர்கள் – அரும்பாடு பட்டு சுதந்திரத்தைப்பெற்றுக் கொடுத்தவர்கள்.

சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதைத்தவிர

மற்றேதும் செய்யாமல் வாழ்ந்தவர்கள், வாழ்கிறவர்கள் தான் பெரும் தொகையினர். சில இலட்சம் பேர் நீங்கலாக மீத மிருக்கும் கோடிக்கணக்கானவர்கள் அன்றும் இன்றும் அகல உழுது கொண்டு இருப்பவர்கள்.

சுதந்திரத்துக்கு முன்பும், பின்பும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பிரமிக்கத்தக்கவைதான்! ஆனால், மனித நேயம் பெருகியதா, வன்முறைகள் குறைந்தனவா, நடு நிலைப் பிறழா நேர்மை பெருகியதா? என்றால் கிடைக்கும் விடை நம்மை சங்கடத்தில் தானே ஆழ்த்துகின்றது.

ஆழ்ந்து சிந்திக்கத்தக்க – ஆழ உழுதலுக்குரிய சில சொற்றொடர்கள் நம்மிடையே புழக்கத்தில் உள்ளன. அவைகளில் இரண்டை மட்டும் சற்று ஆழ உழுது பார்ப்போம். ஒரு சொற்றொடர் "**மனம் போல மாங்கல்யம்.**"

பெருவாரியானோர் புரிந்து கொண்டுள்ள பொருள்யாது ?

எண்ணத்திற்கேற்ற பலன்கள் கிட்டும். இந்த அளவில்தான் இச்சொற்றொடர் பயன். ஆழ உழுது – ஆழ்ந்து சிந்தித்து புரிந்து கொள்ள வேண்டிய நுன்பொருள் யாது?

மனம் மனிதனுக்கு கிடைத்துள்ள வலிமையான சாதனம், எண்ணங்களின் உற்பத்திக்களம். நம்மை குதூகலித்து, கும்மாள மிடச்செய்வதும் மனம் குமுறலிட, குழம்பித் தவிக்க விடுவதும் மனம். அன்பைப் பொழிவதும் மனம். சீற்றத்தைக் கொட்டுவதும் மனம். பணிவை அணியச் செய்வதும் மனம். ஆணவத்தால் அழியச் செய்வதும் மனம். மனத்தின் மாண்பை வலிமையை, மாபெரும் சக்தியை உணர்த்துவதுதான் இச்சொற்றொடரின் உட்பொருள்.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம். நன் மனத்தால் அடைய முடியாதது எதுவும் இல்லை. எண்ணிய எண்ணியாங்கு எய்த இயலும் இவ்வளவும் புரிந்து இச்சொற்றொடர் பயன் படுத்தப்பட்டால்... நினைத்தாலே இனிக்கிறது.

**ஏற்பது இகழ்ச்சி** : நாம் எப்போதோ படித்து, இப்போது முற்றிலும் மறந்து விட்ட மற்றுமோர் சொற்றொடர் ஏற்பது இகழ்ச்சி.

இலவசத்தை ஏற்பதில்தான் எத்தனை சுகம்! எத்தனை மகிழ்ச்சி!! இலவசங்களை அள்ளி வீசுகின்ற எத்தனை திட்டங்கள்!! இலவசங்களை வழங்குவதாகக் கூறும் வண்ண வண்ண விளம்பரங்கள்! ஒன்று வாங்கினால் இரண்டு இலவசம், எங்கே? எங்கே? என ஓடிக் கொண்டிருக்கும் ஏமாளிகள். ஏற்பது இகழ்ச்சி எனும் நன்னெறியை மறந்து ஆண்டுகள் பல விரைந்து ஓடி விட்டன.

சமுதாயத்தின் பெரும் பகுதியினரை பிச்சைக்காரர்களாக்கி வள்ளல்களாக வாழவைத்துக் கொண்டிருக்கிறோம். இது கசப்பான உண்மை. அகல உழுவதின் விளைவு, அல்லது ஆழ உழுதலைத் தவிர்த்ததினால் ஏற்பட்ட அவலம்.

பல நூற்றாண்டுகட்கு முன்னர், நமது நாட்டின் ஒரு பகுதியை மிகச்சிறப்பாக ஆட்சி செய்து வந்த ஓர் மன்னனுக்கு மக்களிடம் அமோக செல்வாக்கு. முதுமை எய்திய மன்னன், பொறுப்புகளில் இருந்து விலகு முன்னர், ஒரு சாசனம் தயாரித்து, புதிதாக பதவி ஏற்கும் மன்னர்கள் அந்த ஆவண விதிகளின் படி ஆட்சி புரிந்திட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்க எண்ணினான். தனது அரசவையை கூட்டி தன் விருப்பத்தை அறிவித்தான். நல்லாட்சி எப்படி நடந்திட வேண்டும் எனும் அத்தனை அம்சங்களும் உள்ளடக்கியதாக, அதே நேரத்தில் மிக மிகச் சுருக்கமானதாக அமைய வேண்டும் அந்த ஆவணம், என உத்தரவிட்டு ஏழுபேர் கொண்ட நன்மக்கள் குழுவை நியமித்தான்.

மன்னன் விதித்த காலக்கெடுவிற்குள் ஓர் ஆவணத்தைச் தயாரித்து சமர்ப்பித்தனர்.

மக்கள் மேம்பாட்டிற்கு இது உதவுமா? என்ற வினாவை எழுப்பினார் மன்னர்.

அனைத்து கோணங்களிலும் ஆராய்ந்து சிறு சறுக்கல் கூட விளைய வாய்ப்பில்லாமல் தயாரித்துள்ளோம் மன்னவரே. “இது தயாரிக்கப்பட எவ்வளவு நாட்கள்? இதனை முழுமையாகப் படித்திட எத்தனை மணி நேரம் ஆகும்?” மன்னனின் வினா.

மூன்று மாதங்களுக்குள்ளேயே தயாரித்து முடித்தோம். பண்டிதர்கள் படித்தால் பத்துமணி நேரம்... பாமரர்கள் படித்தால்... என்று அவர்கள் முடிப்பதற்குள் குறுக்கிட்ட மன்னர், மிகச்சுருக்கமாக, எளிமையான சொற்களால் ஆன எல்லோராலும் ஏற்க இயலுகிறதாக அமைந்திட வேண்டும் என்றல்லவா சொன்னேன்.

மீண்டும் முயல்கிறோம் மன்னா! மன்னியுங்கள் என்று ஏகக்குரலில் சொன்ன அக்குழுவினர் மேலும் பல அறிஞர்களை இந்தக்குழுவில் இடம் பெறச்செய்து இரவு – பகலாக விவாதித்து ஒரு சுருக்கமான ஆவணத்தைத் தயாரித்து சமர்ப்பித்தனர்.

படியுங்கள் கேட்கிறேன் ஆணையிட்டார், அரசர் குழுவின் தலைவர் படித்து முடித்தார். மன்னரின் முகக்குறிப்பில் ஒரு மாற்றமும் இல்லை மகிழ்ச்சியோ, மன நிறைவோ தெரியவே இல்லை. அமைதியாக,

அனைவரையும் பார்த்த மன்னர், எனது அனுபவப் பொறியினின்று தெறித்த, ஒரு சில சொற்களே அடங்கிய, ஓர் கட்டளை பிறப்பித்தால் போதுமென்று நினைக்கிறேன் என்றார் மன்னர், தங்கள் கருத்தினை கட்டளையாக ஏற்க காத்திருக்கிறோம். மன்னா !

**"இலவசத்தை வழங்குவதும், ஏற்பதும் தண்டனைக்குரிய குற்றம்"** மன்னர் சொல்லி முடித்து அவையினர் ஒவ்வொருவர் முகக்குறிப்பையும் அமைதியாகப் பார்த்து முடித்து, தொடர்ந்தார்.

இலவசம் இனி இல்லை எனும் உறுதி வந்து விட்டால் அங்கு உழைப்பின் மாண்பு ஒளிரும் நலமான உடலும், வளமான மனமும் மக்கள் அனைவர்க்கும் கிட்டும். **உபயோகமில்லாத மனிதன், உயிர் வாழவே தகுதியற்றவன்** எனும் சித்தாந்தம் பரவும் நிலைபெறும் என விளக்கினார் மன்னர். பெருவியப்புடன் அனைவரும், கட்டளை பிறப்பியுங்கள் மன்னா என்று ஒரு சேர தங்கள் ஒப்புதலை அளித்தனர். கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மக்கள் மாமனிதர்களாக உயர்ந்தார்கள், என்றெல்லாம் கதை நீள்கிறது. ஆனால் முற்காலத்திலிருந்து, மன்னர்களாலும் மத ஆச்சாரியர்களாலும், மகாவீரர், புத்தர், ஏசுநாதர், குருநானக், முகம்மது நபி, ஆழ்வார்கள், நாயன்மார்கள், மத சீர்திருத்தவாதிகளான விவேகானந்தர், இராமலிங்க வள்ளலார் என இத்தனை நூற்றாண்டுகளாக பண்படுத்தப்பட்ட இந்த சமுதாயம், இலவசங்களை ஏராளமாக (Disproportionate) பெற்றும், இலவசங்களை அளவுக் கதிகமாக வழங்கியும் நிலையற்ற, நிம்மதியற்ற வாழ்வை சந்திக்கும் அவலங்களைத்தானே கண்டு கொண்டிருக்கிறது.

இக்கணத்திலிருந்தாவது ஏற்பது இகழ்ச்சி எனும் உறுதி ஏற்போம். ஆழ உழுதல் அவசியம் எனும் கருத்தினை ஏற்போர் தங்கள் எண்ணங்களை எழுத்தாக்கி தீபநெறிக்கு அனுப்பிவையுங்கள். பிரசுரித்து மகிழ்வோம்.

# பழித்தவை - பதிந்தவை
# கலீல் கிப்ரான் சொன்ன கதை

ஆழ்கடலின் அடியில் முத்துக்கள் குவிந்திருக்கும் இடத்தில் ஒரு அழகான இளைஞனின் உடல் கிடந்தது. பேரழகு வாய்ந்த பொன்னிற குழல் கற்றைகள் தோள்களில் தவழும் மச்சகன்னிகள் சிலர் அந்த இளைஞனின் ஆவி நீங்கிய உடலை பரிதாபமாக பார்த்தவண்ணம் நின்றனர்.

ஒரு கன்னிகை நேற்று நடந்த கடல் கொந்தளிப்பால் இங்கு கொண்டு வரப்பட்ட உடலாக இருக்கலாம் என்றாள். இல்லை, என மறுத்தாள் மற்றொருத்தி. தங்களைக் கடவுளின் வாரிசுகள் என பெருமை பேசிக்கொள்ளும் இந்த மானிடர்கள் தங்களுக்குள் ஓயாது போர் புரிந்து கொண்டே இருப்பார்கள். பல முறை நமது கடல் நீர் கூட ஒரே சிவப்பாக மாறிவிடுவதை பார்த்திருக்கிறோமே! அப்படிப்பட்ட ஒரு யுத்தத்தில் பலியான ஒருவன் தான் இவன் என உறுதியாகச் சொன்னாள்.

மற்றொரு கடல் கன்னி பேசத்துவங்கினாள், எனக்கு யுத்தம் என்றால் என்ன என்றே தெரியாது, தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை. பூமி முழுவதையும் வென்ற மனிதன் கடலையும் வெற்றி கொள்ள முயன்றானாம். சீற்றங்கொண்ட நமது கடலரசன் வெகுண்டெழுந்து பல கடற்கரை நகரங்களை விழுங்கினாராம். மிரண்டுபோன மனிதர்கள் நமது கடலரசனுக்கு காணிக்கையாக தங்களுள் பலரை பலி கொடுத்து காணிக்கை செலுத்துகிறார்களாம். அப்படி பலியானவன் தான் இந்த அழகிய யுவன் என இரக்கத்தோடும் பரிவோடும் பேசி முடித்தாள்.

அந்த மச்சகன்னிகள் அனைவரும் மிகுந்த உருக்கத்தோடு அந்த இளைஞனின் உடலை நெருங்கி நின்று கவனித்தார்கள். அவன் உடைகளின் உட்புறத்தில் ஒரு கடிதம் இருந்ததை எடுத்தனர். ஒருத்தி படிக்கத் துவங்கினாள்.

என் அன்பே !

என் கண்ணீரைத்தவிர எனக்குத் துணையுமில்லை ஆறுதலுமில்லை. நீங்கள் யுத்தத்திலிருந்து திரும்பி வந்து விடுவீர்கள் எனும் நம்பிக்கைதான் என்னை வாழவைத்துக் கொண்டிருக்கிறது. பிரிவுத்துயரில் தவிக்கும் என் ஆத்மாவோ, துன்பத்தை இன்பமாகவும், துயரத்தையே ஆனந்தமாகவும் செய்யவல்ல அன்பினால் மட்டுமேஆறுதல் பெற்றுவருகிறது.

நம் உள்ளங்களை காதல் பிணைத்தபோது, இறைவன் நம் இதயங்களை பிணைத்திடும் நன்னாளை நாம் ஆவலுடன் எதிர்பார்த்தபோது, யுத்தம் தனது பயங்கரக்குரலில் கட்டளையிட்டு, உங்களை என்னிடமிருந்து பிரித்து விட்டது. கடமையை உத்தேசித்து நீங்களும் புறப்பட்டுச் சென்றீர்கள்.

அன்பினால் பிணைந்த இதயங்களை பிரிக்கும் கடமை என்பது தான் என்ன?

குழந்தைகளை அனாதையாக்கி, பெண்களை நிர்கதியாக்கி, அலறவைக்கும் **கடமை என்பது தான் என்ன?**

அற்பக்காரணங்களுக்காக, சாம்ராஜ்யங்களையே அழித்திடும் **தேசபக்தி என்பதன் பொருள்தான் என்ன?**

கடமை என்பதன் பெயரால் அப்பாவி மக்களை **தங்கள் புகழுக்காக ஆளும் வர்க்கம் மடியச்செய்கிறதே?** இதுவா கடமை!

நாடுகளிடையே நிலவும் அமைதியைக் குலைத்து, நிம்மதியான வாழ்வை அழிப்பது கடமையென்றால், மனித உயிர்களின் புனிதத்தன்மையை சீரழிப்பதுதான் தேசபக்தி என்றால் அந்த கடமைக்கும் தேசபக்திக்கும் சாந்தி கிடைப்பதாக !

கடிதத்தைப் படித்து முடித்த கடல் கன்னிகளின் நெஞ்சங்கள் துயரத்தால் கனத்தன. கடிதத்தை அந்த இளைஞனின் உடைகளின் இடையே செருகிவிட்டு, அமைதியாக நீந்தி அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

**மனித இதயம் நமது கடலரசனின் இதயத்தை விட கொடூரமானது** என்று ஒருத்தி துயரம் தோய்ந்த குரலில் சொல்ல அனைவரும் ஆமோதித்து கண்ணீர் விடுத்தனர்.

கலீல்கிப்ரான் கதை இதோடு முடிகிறது.

படித்து முடித்த நம்முடைய நெஞ்சங்களும் கனக்கிறது. போர் எத்தனை கொடியது. புறக்கணிக்கப்பட வேண்டியது எத்தனை அவசியம், என்றெல்லாம் எண்ணங்கள் சுழல்கின்றன அல்லவா? எல்லோரையும் பலியிட்டு விட்டு, எவருமே மிச்சமில்லை என்ற நிலையில் எந்த தேசத்திற்கு அந்த தேசபக்தியால் என்ன பயன்? நம்மால் போர்களை நிறுத்த இயலாவிட்டாலும், நாம் நடத்திக் கொண்டிருக்கும் போராட்டங்களை ய ாவது தவிர்க்கலாமே!

# அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்

அன்று அரசன் இன்று அரசு! நம்மால் நமக்காக நாமே நடத்துகின்ற அரசு. அன்றைய அரசன் அன்றே கொன்றானெனின் அத்தகு அவசரம் ஏன் தேவைப்பட்டது ?

குற்றவாளி எனத் தெரிந்த பின் உடனடியாக தண்டனை வழங்கி, அதுவும் அன்றே நிறை வேற்றப்பட வேண்டும் என்ற வழக்கம் அன்று இருந்ததற்கு ஏதும் தகுந்த காரணம் இருந்தாக வேண்டு மல்லவா? வள்ளுவரின் குறளில் இதற்கு விடை கிடைத்தது.

**கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களை கட்டனொடு நேர்** – குறள் 550

பசுமையான பயிர்கள் செழித்து வளர தடையாக இருக்கும் களைகளை அவ்வப்போது அகற்றி அழிக்கும் நல்ல விவசாயி போல, நல்லோர் நெறிவழி நிற்க, நீடுவாழ, அறங்காக்க, தீயோரை கொலையில், கொடியாரை, வேந்தன் இனங்கண்டு அவ்வப்போது அகற்றுதல் ஒறுத்தல் மிக மிக அவசியமான செயலாகும் என வள்ளுவர், அரசனின் கடமை என அறிவுறுத்துகின்றார்.

களைகளை அழித்தலை அன்றைய அரசன் தலையாய கடமையென செயல்பட்டான். இன்றைய அரசோ, நம்மால் நமக்காகவே நடத்தப்படுகின்ற அரசோ, களைகளை அகற்றுமுன் **நின்று ஊர்ந்து நடந்து** பல்லாண்டுகள் பல முறைகள் ஆய்வு செய்து, பல நூறு கொலையில் கொடியாரை பல கோடிகள் செலவில் பாதுகாத்துக் கொண்டல்லவா வருகிறது !! இது விநோதமான விபரீதமான வேடிக்கையல்லவா ?

இதுதான் சரி என்று வாதிடுவோரும் உண்டு !!

அரசன், அரசு ஆய்வை, விடுத்து தெய்வத்தை நாடுவோம் தெய்வம் நின்று கொல்லும் என்பதல்லவா வாக்கு !

அன்றும் தெய்வம் – இன்றும் தெய்வம் என்றும் தெய்வமாகத்தான் இருக்கும், நாம் புரிந்து கொள்ள முயலாத வரை! நின்று, நிதானித்து முழுமையாக ஆராய்ந்து தண்டித்துக் கொண்டிருந்த தெய்வம் கூட இன்று அவசரமாக மிக அவசரமாக, அரசனை விட அவசரமாக செயல்ப்படுவதாக அல்லவா தோன்றுகிறது.

ஒரு நாளைக்கு, சராசரியாக ஐந்தாயிரம் பேர் விபத்தினால் குண்டு

வெடிப்பினால், வன் முறையினால், உயிர் இழந்து கொண்டே இருக்கிறார்களே?

இவையெல்லாம் நெறிபிறழ்ந்த மனிதனுக்கு தெய்வம் தரும் தண்டனையாக கொள்ளலாமா?

நிதானமாக செயல்பட்டு வந்த தெய்வம் இன்று அசுரகதியில் செயல்பட்டு கொல்வது அல்லது தண்டிப்பது ஏன்?

சுனாமி போன்ற இயற்கை சீற்றங்கள் பேரிடர்கள் அடிக்கடி நிகழ்வதும் தெய்வம் தரும் தண்டனை தானே?

தெய்வம் நின்று கொல்லும் என்பதன் உட்பொருள் தான் என்ன ?

இவ்வாக்கு, இக்காலத்திற்குப் பொருந்தாது, காலம் மாறிப் போச்சு என ஒதுக்கிவிட இயலாது நுட்பமான உட்பொருள் இதில் பொதிந்திருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

அரசனோ, அரசோ, தான் கண்டு, கேட்டு, விசாரித்து, அறிந்த, தகவல்கள் மற்றும் ஆவணங்களை வைத்துக்கொண்டு, வரையறுக்கப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டு நடத்துகிறான்.

ஆனால், **தெய்வமோ, தண்டனைகளை அல்லது துன்பங்களை, நோய்கள் மூலமோ விபத்துக்கள் மூலமோ, இழப்புகளையும், பேரிழப்புகளையும் தோற்றுவித்து மெல்லக் கொல்கிறது**, அல்லது ஒரு நொடியில் முடிவை வழங்குகிறது.

இது எந்த அடிப்படையில் நிகழ்கிறது அல்லது தெய்வம் நிகழ்த்துகிறது.

**தினை விதைத்தவன் தினை அறுப்பான்.**

**வினை விதைத்தவன் வினை அறுப்பான்**

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**

**நமது சிந்தை சொல் செயல்**

எண்ணம், பேச்சு, இயக்கம் இவைகள் எங்கிருந்து பெறப்படுகின்றன ?

**நற்குடிப் பிறப்பு, நல்லோரிணக்கம், நன்னெறி உய்க்கும்**

எண்ணுந்திறன் படைத்த மனிதன் தனக்கு உதிக்கின்ற எண்ணங்களை எங்கிருந்து, எப்படி பெறுகிறான் ?

எண்ணங்கள் நம் மனதில் திடீரென்று தோன்றுகின்றனவே. இந்த

அற்புதம் எப்படி நிகழ்கின்றது என ஒரு கணம் சிந்தித்தவர்கள் புரிந்து கொள்ள முயன்றவர்கள், முயல்கிறவர்கள் மிகக் குறைவாகத்தான் இருப்பர்.

பிராணத்தை இயக்க வைத்துக்கொண்டிருக்கும் பிராண வாயுவை எங்கிருந்து எப்படி பெறுகிறோம்? என்பதை கூட அறியும் அவசியமில்லாமல் வெகு இயல்பாக சுவாசிக்கிறோம். மூச்சு விட போராடும் போதுதான் மூச்சு பற்றிய சிந்தனையே வருகிறது.

**சற்றேறக்குறைய ஒன்பதாயிரம் எண்ணங்கள் ஒரு நாளில் மனித மனத்தில், தோன்றி மறைகின்றனவாம். இதில் 99% விழுக்காடு பழைய எண்ணங்களே!** நேற்று எண்ணியதை இன்றும் – இன்று எண்ணுவதையே நாளையும் எண்ணி புலம்புகிறோம். சற்றுமுன் எண்ணியதையே இப்போதும் எண்ணி எண்ணி சலித்துக் கொள்கிறோம். அரைத்த மாவையே அரைத்து அரைத்து அல்லலில் உழல்கிறோம். புதிய எண்ணங்கள் புதிய செயல்கள் செய்திட புத்துணர்வு, இவைகளெல்லாம் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

நின்று கொன்ற தெய்வம், விரைந்து தண்டிப்பதற்கும், அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கும் நமது மனோபாவத்திற்கும் என்ன சம்பந்தம் என்றுதானே வினவுகிறீர்கள் ?

**மனித எண்ணங்களின் தூய்மையை, எண்ணங்களின் தரத்தை செயல்களின் விளைவுகளை, அரசோ, அரசனோ ஆய்வு செய்வதைவிட ஆயிரம் மடங்கு துல்லியமாக ஆயவல்லது நம்மை இயக்கும் பேராற்றால் தெய்வம்.**

வள்ளலாக வாழ வேண்டும். பேரறிவு, புகழ் ஈட்ட வேண்டும் எண்ணங்களைத் தூய்மைப்படுத்த முயற்சி மேற்கொள்வோம். எண்ணற்ற கல்விச்சாலைகள், ஆய்வுக்கூடங்கள், நூதனமான கண்டு பிடிப்புகளுக்கு குறைவே இல்லை (ஆனால் எண்ணத்தூய்மையை வலியுறுத்த உறுதிபடுத்த எங்கு செல்லலாம்.

எங்கள் Ultimate Objective என பயணிக்கும் இளைஞர்களும் வழி நடத்தும் தலைவர்களும் அரிதாகி வருகின்றனரே ?

நல்லெண்ணம், நன்னெறி மட்டுமே மனித சமுதாயத்தின் குறிக்கோள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலே, தெய்வம் அவசரமாக மனித குலத்தை அழிக்கும் முயற்சியை கைவிட்டு நின்றுகொல்லும். நிதானித்து தண்டிக்கும்.



வள்ளலார் உருவாக்கிய தீஞ்சுவை நீரோடை அன்றும் இன்றும்

**அன்பினில் கலந்து எனதறிவினில் பயின்றே**
**இன்பினில் அளந்த என் இன்னுயிர் நட்பே**

# EDGING GOD OUT (EGO)

ஒரு துறவி தனது சீடர்களைப்பார்த்து வினவினார், "இறைவனின் இருப்பிடம் அறிவீரா?"

இறைவனின் உறைவிடம் ஆலயம். பலராலும் பூஜிக்கப்படுவதால், பக்தர்களுக்கு அருள் பாலிக்க பரமன் ஆலயங்களுக்கு வருகிறான் என்பது நம்பிக்கை எனும் மையக்கருத்தை வெவ்வேறு வார்த்தைகளால் தங்கள் விடைகளாகப் பகர்ந்தனர் சீடர்கள். சில சீடர்கள், வைகுண்டம் என்றும், கைலாயம் என்றும் பாற்கடல் என்றும் இதிகாசங்களையும் புராணங்களையும் மேற்கோள் காட்டி தாங்கள் கற்றுத் தேர்ந்த புலமையை வெளிப்படுத்தினர்.

அவன் இல்லாத இடம் தான் எது. தூணிலும் இருக்கிறான் துரும்பிலும் உள்ளான். அனைத்து சீடர்களின் விடைகளையும் அமைதியாகக் கேட்ட துறவியாரின் முகத்தில் அதிருப்தியைக் கண்ட சீடர்கள், தங்களுக்குள்ளே பார்வைகளை பரிமாறிக்கொண்டனர். சிறிது நேரம் மௌனம் காத்த குரு பேசத்துவங்கினார். மக்கள் ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் பன்னெடுங் காலமாக, பல்வேறு ஆலயங்களுக்கு சென்று வருவது வாடிக்கையாகிவிட்டது.

இறைவன் இருப்பிடமாகக் கருதித்தானே ஆலயங்களுக்கு செல்கிறார்கள். ஆலயம் செல்லும் பக்தர்கள் அங்கே என்ன செய்கிறார்கள்? அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, உற்சவங்கள், வீதி புறப்பாடு, வாணவேடிக்கை என விமரிசையாக செய்கிறார்கள். வழிபாடும் செய்கிறார்கள். தங்கள் நேர்த்திக்கடன்களைச் செலுத்துகிறார்கள். நெரிசலில் சிக்கி திக்குமுக்காடி திரும்புவோர் உண்டு.

பாசுரங்கள், பதிகங்கள் பாடியும், தங்கள் பக்தியை வெளிப்படுத்தியவர்கள் நமது முன்னோர்கள் பலர், பெருவாரியான பக்தர்கள் மனமுருகப் பிரார்த்திக்கிறார்கள். பிரார்த்தனை எது பற்றி? பிரார்த்தனைகள் அத்தனையும் வேண்டுதல்கள், விண்ணப்பங்கள் கோரிக்கைகள் அல்லவா? ஞானிகள் கூட விண்ணப்பங்களைத் தான் வைத்திருக்கிறார்கள். அவை பிறவாமை வேண்டும்.

வள்ளலார் கூட உத்தமர்தம் உறவு வேண்டும் என்ற உன்னதமான வேண்டுதல்களைத் தானே இறைவன் சன்னிதானத்தில் சமர்ப்பித்தார். நாயன்மார்களின் கோரிக்கைகளோ ஏராளம், ஏராளம். நோய் குணமாக வேண்டும், தேர்தலில் வெற்றி பெற வேண்டும், தேர்வில் வெற்றி கிடைக்க

வேணும், மகளுக்கு திருமணம், பதவி உயர்வு வேண்டும், சொந்த ஊருக்கு மாற்றுதல் வேணும், மழை வர வேண்டும், மழை நின்று விட வேண்டும். மனித மனத்தில் உருவாகின்ற அத்தனை விருப்பங்களையும் ஆசைகளையும் விண்ணப்பங்களாக்கி, ஆண்டவா! நீ இவற்றை நிறைவேற்றியே தர வேணும் என நிர்பந்திக்கிற நிலைதான் பிரார்த்தனை என்ற பெயரில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

விண்ணப்பங்களோடு விட்டாலும் பரவாயில்லை இதை இந்த தேதிக்குள் நீ நிறைவேற்றினால் நான் உனக்கு இவ்வளவு காணிக்கை செலுத்துகிறேன் என பேரங்களும் நடத்துகின்றார்கள் அப்பாவி பக்தர்கள். உண்மைதானே! அல்லது நான் மிகைப்பட சொல்கிறேனா? என சீடர்களை வினவினார் துறவி, சிந்தனை வயப்பட்ட சீடர்கள் பதில் ஏதும் சொல்லவில்லை.

அன்பைக் கேட்கலாம். அறிவைக் கேட்கலாம். ஆற்றலைக் கேட்கலாம். துணிவைக் கேட்கலாம். உள்ள உறுதியைக் கேட்கலாம். ஆனால் அழிவைத்தரும் அற்ப விருப்பங்களையல்லவா வருந்தி வருந்தி விண்ணப்பிக்கிறார்கள். ஆலயங்கள் தோறும் இதேநிலை. கடவுள் அருளாளர், பேராற்றல் மிக்கவர் நிறைந்த பரிபூரணர் நமது புரிதலுக்கும் அப்பாற்பட்டவர். பக்தன் வைத்திடும் அத்தனை கோரிக்கைகளையும் அப்படியே நிறைவேற்றி விடுவது ஆண்டவனுக்கும் அரிதல்ல. ஆனால் உகந்ததல்ல என எண்ணிய ஆண்டவர் தன் இருப்பிடத்தை ஒவ்வொரு ஆலயமாக மாற்றிப்பார்த்தார். எந்த ஆலயம் சென்றாலும் பக்தர் கூட்டம் கோரிக்கைகளோடு கூட்டம் கூட்டமாக முற்றுகையிடுகிற நிலையையே கண்ட ஆண்டவர் திக்குமுக்காடி திணறிப்போனார்.

இதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவும், மனிதனை நல்வழி நடத்திடவும் என்ன வழி என்று யோசித்தார். பக்தன் தன்னைத் தேடாத ஒரு இடத்தைத் தேடி தான் அங்கே குடி போகலாம் என்று தீர்மானித்த ஆண்டவர் ஓர் அருமையான இடத்தைத் தேர்ந்தெடுத்தார் அங்கே நிரந்தர மாகக் குடியேறியும் விட்டார்.

அந்த இடம் எது? குருவின் கேள்வியை தொடர்ந்து அமைதி நிலவியது பின் குருவே தொடர்ந்தார், மனிதனுக்கு மிக அருகில் இருக்க வேண்டும் தேடினால் எளிதில் கிடைத்திட வேண்டும். ஆனால் அவன் தேடாத இடமாகவும் இருக்க என யோசித்த ஆண்டவர் **தேடும் நாட்டமே இல்லாத மனிதனின் உள்ளத்தை, இதயத்தை, தன் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தார்.**

இல்லாத இடத்தையே தேடித் தேடி அலைகிற மாந்தர், அவன்

இருக்குமிடம், தனது இதயகமலம் தான் என அறிந்திடவுமில்லை, அவன் துணையைப் பெற்றிடும் எளிய வழிகளைப் பின்பற்றவுமில்லை.

ஆண்டவன் நம்மில் இருக்கிறான். நம்முடனேயே இருக்கிறான். நம்மை நல்வழி நடத்திடத்தான் முயன்று கொண்டிருக்கிறான்.

ஆனால் மனிதனோ, அருளாளன் இருப்பிடத்தில் ஆணவத்தை அமரச்செய்து, அகந்தை காட்டிடும் அழிவுப் பாதையில் பவனிவந்து கொண்டிருக்கிறான்.

ஆணவமா! எனக்கா! என்று சொல்லிக்கொள்பவர் ஏராளம், ஒரு சிலர் நீங்கலாக ஏனைய பெரும்பான்மையினர் ஆணவத்தின் ஆட்சிக்குட்பட்ட பிரஜைகள்தான். **என்னால் முடியும் என்பது தன்னம்பிக்கை, என்னால் தான் முடியும் என்பது அகந்தையின் வெளிப்பாடு.** என்னால் வாழ்விக்கப்பட்டோர் எண்ணிலடங்காதோர், என்று தன் புகழ் பாடிக் கொள்ளும் எத்தனை மனிதர்களை அன்றாடம் சந்திக்கிறோம்.

பெருமிதம் வேறு. ஆணவம் வேறு. இதயகமலத்தில் குடியிருக்கும் ஆண்டவனை, அருளாளனை, விரட்டுகின்ற ஆணவத்தை அகங்காரத்தை முதற்பணியாக மனிதன் வெளியேற்றி விட்டு பரம்பொருளை இதயத்தில் நிறுத்தவேண்டும் இது ஒவ்வொரு மனிதனுடைய முழுமுதல் கடமை. நம் இதயத்தில் இறைவன் இருப்பதை உணர்ந்து கொண்டாலே போதும். அவன் நம்மை வழி நடத்துவான். அகந்தையை அகற்றுவோம்! பணிவை அணிவோம்! அன்பால் இணைவோம்!

பரம் பொருளை ஏத்திட, உள்ளொளி பெருகிட, நல்வழி ஒன்று நல்குவேன், எளிதான இவ்வழி – யாவர்க்கும் ஏற்ற வழி **“ஓம் நமச்சிவாய”** என அன்றாடம் 108 முறை ஓதுங்கள். உங்கள் இதயத்தில் குடி கொண்டிருக்கும் அருட்பெருஞ்ஜோதி உங்களை வழி நடத்துவதை உணர்வீர்கள் “ஓம் நமசிவாய” துறவி தன் உரையை முடித்தார்.

# டாக்டர் கலாம் ஐயாவின் கனவுகள் நனவாக

### மாணவர்கட்கு

(பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கூட விரும்பத்தக்கது வரவேற்புக்குரியது)

**கற்க கசடற கற்பவை கற்ற பின்**
**நிற்க அதற்குத் தக** – குறள் 391

எளிமையான சொற்களால் தொகுக்கப்பட்ட ஆழமான அடிப்படையான சமுதாயத் தேவைகளை வற்புறுத்தும் அருமையான குறள்.

1. கற்க : அன்பான கட்டளை
2. கசடறக்கற்க : குற்றங்களைந்து கற்க
3. கற்பவை கற்க : கற்க வேண்டியவைகளை கற்கத் தகுந்தவைகளை மட்டும் தேர்ந்து கற்க.
4. கற்றபின் கற்க : கற்ற பின்னும் தொடர்ந்து கற்க, உணர்ந்து கற்க.
5. அதற்குத்தக நிற்க கற்க : கற்ற வழி நிற்க கற்க.

கற்க வேண்டியவைகளைத் தேர்ந்து, குற்றங்களை களைந்து, கற்று, கற்ற பின்னும் தொடர்ந்து கற்று, கற்ற வழி உறுதியாக நிற்கவும், கற்றுவிட்டால், இவை கடைபிடிக்கப்பட்டால், குறைந்த பட்சம் இன்று முதல் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டால், கலாம் ஐயாவின் கனவுகள் நிச்சயம் நனவாகும்.

அப்படியெனில் இப்போது நாம் கற்கவில்லையா ? கல்வித்தரமும், வாழ்க்கைத்தரமும், எவ்வளவோ உயர்ந்துள்ளதே! (Positive Thought) என உடன்பாட்டுச் சிந்தனையாளர்கள் விமர்சிப்பதை உணரமுடிகிறது.

கற்கிறோம் – நிறையவே கற்கிறோம் – ஏராளமானவர்களும் கற்றுத் தேர்ந்தவர்களாகிவிட்டார்கள் உண்மை. மிகையற்ற உண்மை. **ஆனால் கற்றவற்றை விற்கத்தானே விரைகிறார்கள்.**

முதற்கண், எதைக்கற்கிறோம் ?

கற்றவைகளைக் கசடறக் கற்றோமா ?

கற்ற பின்னும் கற்று உணர்கிறோமா ?

இறுதியாக,

கற்ற வழி நிற்க கற்றோமா ?

பெற்றோர்கள், தங்கள் மக்கட் செல்வங்கள் செல்வம் குவித்திடும் – சொர்க்க பூமிக்குச் சென்று கோடி கோடியாக அனுப்பிவைக்கும் வல்லமை பெறு வதைத்தான் முழு முதல் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

ஆசிரியர்கள் Syllabus Complete செய்வதையும், தங்கள் பள்ளி 100% சதவிகிதத் தேர்ச்சி பெற்றமையைக் கொண்டாடுவதையே குறிக் கோளாகக் கொண்டுள்ளனர்.

“நிற்க அதற்குத்தக” எனும் சொற்சொடருக்கு நாம்புரிந்து கொள்ளும் பொருள் **“கற்ற வழி நிற்றல்”** என்பதுதான் பயன்பாட்டுக்குரியதாக மாற்றிட ஆய்வுகள் நடத்திடும் ஆற்றலைத்தான் கற்றபின் நிற்க அதற்குத்தக என்றார், வள்ளுவர்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் தம்மக்களும், தமது மாணவர்களும் கற்ற வழி நிற்கும் ஆற்றல் பெற்ற அருந்திறனாளிகளாக உருவாகவேண்டும் என்றும் – உருவாக்கிடுவோம் என்றும் உறுதி பூணுவார்களெனில் டாக்டர் கலாம் ஐயா கனவு நனவாவது, எளிது, மிக மிக எளிது.



வள்ளல் பெருமான் வாழ்க்கை வரலாற்றிலே கல்பட்டு அய்யாவின் மடியில் தலை வைத்து படுக்கும் பாக்கியம்

# கற்றவை - பெற்றவை

உங்கள் பிரார்த்தனைகள் நிறைவேற வேண்டுமா ?

1. உங்களால் அடுத்தவருடைய முன்னேற்றத்தில் அவர் தம் மகிழ்ச்சியில் பங்கு பெற இயலுமா ?
2. பிறர் நலம் பேணலும் பிறருக்காக பிரார்த்திப்பதும் உங்கட்கு நிறைவைத் தருமா ?
3. பிறிதின் நோய், தன் நோய் போல் வருந்தும், வாட்டமுறும் மனப்பாங்கு உள்ளவரா நீங்கள் ?
4. நடக்கின்ற யாவையும் நல்லவைகளே என்று எதிர்படுபவைகளை அப்படியே, “ஏன்? எனக்கு மட்டும்” என்று ஏங்கிடாமல் ஏற்றுக் கொள்ளும் இயல்புடையவரா நீங்கள் ?

அப்படியெனின் உங்கள் பிரார்த்தனைகள் நிச்சயம் நிறைவேறும். உங்கள் தீவிர சிந்தனைகள் தான் செயல் வடிவம் பெறுகின்றன. உங்கள் தீவிர நம்பிக்கைதான் உங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகின்றன.எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணயராகப் பெறின். தீவிரமாகத்தான் எண்ணுகிறேன். விருப்பங்கள் நிறை வேறுவதில்லையே என ஏங்குவோர், வருந்துவோர், விரக்தியின் எல்லைக்கே சென்று விடுவோர் ஏராளம். எண்ணியர் திண்ணியராக இல்லாததுதான் இதற்கு காரணம்.

திண்ணிய மனது :<br>
**தூய்மையின் பிறப்பிடம்**<br>
**உறுதிப்பாட்டின் உறைவிடம்**<br>
**பேரன்பின் புகலிடம்**<br>
**வாய்மையின் வாழ்விடம்**

இந்த பண்புகள் நிறைந்திட்ட திண்ணிய மனது எண்ணியது எண்ணிய கணமே நிறைவேறும். இதனை தொல்காப்பியர், திருவள்ளுவருக்கு முன்பாகவே தெரிவித்துவிட்டார். அதையும் தெரிந்து கொள்ளலாமே!

**“கல்வி தறுகண், இசைமை, கொடை<br>
என சொல்லப்பட்ட பெருமிதம் நான்கு”** – தொல்காப்பியம்

மனிதப்பிறவிக்குத் தேவையான பெருமிதங்கள் நான்கு, அவை கல்வி, துணிவு, அனைவரையும் ஏற்கும் இசைமை எனும் இனிய பண்பு, கொடுத்தலில் இன்பம் காணும் தகைமையான கொடை நான்கு பெருமிதங்களையும் ஒரு சேரப்பெற்றோர் திண்ணியர். அவர் எண்ணியதெல்லாம் நிறைவேறும்.

அடுத்தவர்கட்காக பிரார்த்திப்பதும் அடுத்தவர் நலத்தில் மகிழ்ச்சி கொள்ளுதலும் அடுத்தவர் துன்பத்தை தன் துன்பமாகக் கருதி அவற்றை துடைத்திட பணியாற்றிக் கொண்டிருப்பதுதானே தீபம் அறக்கட்டளை. அவர்களோடு நம்மை இணைத்துக் கொண்டாலே நமது பிரார்த்தனைகள் நிறைவேறும் அல்லது அவர்கள் தொடர்பால் நிறைவேறக்கூடிய நல்ல பிரார்த்தனைகள் மட்டுமே நமது மனதில் உருவாகும்.



வடலூர் தைப் பூச பெருநாளில் மலர் அலங்காரத்துடன் மகா ஜோதி தரிசனம்

**என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து**
**என்னுளே விரிந்த என்னுடை அன்பே!**

# விடை காண வேண்டிய வினா ??

தொற்று நோய்கள் என அறியப்பட்ட சில கொடிய நோய்கள், தோற்றுப்போய் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டனவே ! ஆனால் ஒரே ஒரு நோய் மட்டும் நாளுக்கு நாள் தன் வடிவத்தையும் வண்ணத்தையும் வெவ்வேறு விதமாக மாற்றிக்கொண்டு நான் இல்லாத இடமில்லை எனுமாறு நீக்கமற நிறைந்து நல்ல சமுதாயமாக முன்னேற விடாமல் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றதே !! அடையாளம் காண ஓரிரு கணம் போதுமே! அந்த அளவுக்கு மலர்ந்துவிட்ட அந்த நோய் இல்லாத பணிமனை இல்லை – அலுவலகம் இல்லை – அரசுத்துறைகளில் ஒன்றைக் கூட விடாமல் தொற்றிக்கொண்டு, புராணங்களில் பேசப்படுகின்ற அசுர சக்தியோடு அல்லவா அழிவை நோக்கி இந்த சமுதாயத்தை அழைத்துச் செல்கின்றது. அதுதான் ஊழல்

ஊழலை எதிர்க்காதவர் இல்லை, எதிர்த்து எழுதாதோர் இல்லை, பட்டி மன்றங்களில் பேசாதோர் இல்லை, ஊடகத்தொகுப்பாளர்கள் நேர்காணலில் தங்கள் வாக்குவன்மையை மிகையாகவே கொட்டித் தீர்க்கிறார்கள்.

உண்ணாவிரதம் மேற் கொள்வோர், இறுதிநாள் நிர்ணயிப்போர், சொற்போர் நிகழ்த்துவோர், நீதிமன்றங்களை அவசரகதியில் இயக்க முயற்சிப்போர் என ஏராளமாக இருக்கிறார்கள் என அறிய முடிகிறதே தவிர உண்மையில் ஊழலுக்கு துணை போகாமல் என்னால் வாழமுடிகிறது என ஒரு தனிமனிதன் துணிந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள முன்வராதது தான் விசனத்துக்குரியது.

“நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்–அஞ்சி அஞ்சிச்சாவார் இவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே” என பாரதி நொந்த உள்ளத்தோடு பாடி மறைந்தானே இன்னும் இந்த சமுதாயம் வீழ்ப்படையவில்லையே ஏன்? என்னதான் செய்வது? விமர்சிப்பது எளிது! அதை நிறையவே செய்துவிட்டோம், புலம்பிக்கொண்டு இருக்கிறோம்.

கடமையைச்செய்ய கையூட்டு எதிர்பார்க்கும் அவலத்தைச்செய்ய அஞ்சும்படி – வெட்கப்படும்படி ஏதாவது செய்யமுடியுமா ?

வாசக அன்பர்களே! உண்மைத்துறவி விவேகத்தின் உறைவிடமாகத் திகழ்ந்த விவேகானந்தர் கூறினார்.

**Real Education**

"We want that Education by Which Character is formed - Strength of mind is increased, the intellect is expanded and by which one can stand on his own feet"

நமக்கு வேண்டுவதெல்லாம் ஒழுக்கத்தைத் தரும் கல்வி. நமது எண்ணும் ஆற்றலை துண்டிடும் கல்வி. நமது தூய்மையான அறிவை விரிவாக்கிடும் கல்வி. இலவசத்தை ஏற்காமல் நமது வலிமையால் வாழ்ந்திடும் கல்வி.

இத்தகு கல்வி இல்லாமைதான் கோளாரா? அல்லது கல்விதருவோரும், பெறுவோரும் நல்ல இலக்கு நிர்ணயித்திடாமல் இலவசத்தை நோக்கியே பயணிப்பதுதான் குறைபாடா?

தொடர்ந்து சிந்திப்போம், நல்ல தீர்வு காண்போம், தீபத்தின் மூலம் செயல்படுத்துவோம்.



வடலூர் தைப் பூச பெருநாளில் மின் ஒளியில் சத்திய ஞான சபை

# பழத்தவை - பதிந்தவை

## ஆலிவ் மரம்
## (ஓர் ஆங்கிலக்கவிதையின் தமிழாக்கம்)

மரங்கள் அடர்ந்த ஒரு மலை மீது அருகருகே அமைந்துள்ள இரு குகைகள். அந்தக்குகைகளிலே வசித்து வந்தனர் இரு துறவிகள். தங்கள் தேவைகளுக்காக, பிறரை நாடாத நல்லவர்கள். ஆனால் பிறர் நலங்களுக்காக பிரார்த்திப்பதையே அன்றாடக் கடமையாகக் கொண்டவர்கள்.

தேவைகளைத் துறக்கப் பயின்றவர்களாக இருப்பினும் அடிப்படைத் தேவைகளே ஓரிரண்டு இருக்கத்தானே செய்யும். இரவு நேரங்களில், இருளை விலக்கிட ஒரு அகல் விளக்கு. அதற்கு தேவையான எண்ணெய் மிக அவசியத் தேவையான எண்ணெய்க்கு என்ன செய்தார்கள்? எப்படி பெற்றார்கள்? அவர்கள் வசித்து வந்த குகைகளுக்கு சற்று தூரத்தில், மலைச்சரிவில் ஆங்காங்கு ஆலிவ் மரங்கள் வளர்ந்திருந்தன. ஆலிவ் விதைகளை சேகரித்து தங்களுக்குத் தேவையான எண்ணெயைத் தயாரித்துக் கொள்வார்கள்.

சற்று தூரம் சென்று, ஆலிவ் விதைகளை சேகரிப்பதை விட, தங்கள் குகைகளுக்கு எதிரிலேயே ஆலிவ் மரங்கள் இருந்தால் நலமாக இருக்குமே என எண்ணினார்கள். இரண்டு துறவிகளும் உடனடியாக செயலில் இறங்கினார்கள். தங்கள் குகைகளுக்கு எதிரே இருவரும் ஒவ்வொரு ஆலிவ் விதையை விதைத்தனர்.

ஓரிருநாளில் இளந்தளிர் ஒன்று துளிர்த்து எட்டிப்பார்த்தது, ஒரு துறவிக்கு இந்தக்காட்சி பரவசமூட்டியது. மற்றவரோ, இறையாற்றலை எண்ணி மௌனப் புன்னகை உதிர்த்தார்.

பரவசமுற்ற முதல் துறவி, இறைவனை நோக்கி பிரார்த்தனையை துவக்கினார். “இறைவா இந்த இளந்தளிர் செடியாக வளர நீதான் அருள்பாலிக்க வேண்டும். இதற்குத் தேவையான தண்ணீரைத் தந்தருள்க. சிறிதளவு போதும். அதிகம் வேண்டாம் அளவாகக் கொடுத்திடு – ஆண்டவனே”. பிரார்த்தனையை ஏற்றார் இறைவன். சிறிதளவு மழை பெய்து நின்றது.

அடுத்த பிரார்த்தனை, “மிதமான சூரிய ஒளி வேண்டும் இறைவா!” அதிகமாகக் கொடுத்து தீய்த்துவிடாதே. அனல் இல்லாத ஒளி, செடி விரைவாக வளர்ந்திட வேண்டும்.

இறைவன் நிறைவேற்றினார். அடுத்து என்ன கேட்கலாம் இறைவனிடம், என யோசித்தார் துறவி. செடி வேகமாக வளர என்ன வெல்லாம் வேண்டும் என அவர் அறிந்திருந்தாரோ? அத்தனையையும், அடுத்தடுத்து விண்ணப்பமாக வைத்துக்கொண்டே இருந்தார். இறைவனும் அவர் கேட்ட வண்ணமே அருள் பாலித்துக் கொண்டிருந்தார். சில வாரங்களில் ஆலிவ் செடி செழுமை குன்றி சிதைய ஆரம்பித்தது.

பரவசப்பட்ட துறவி பதை பதைக்கலானார். பக்கத்துக் குகையின் எதிரில் விதைக்கப்பட்ட விதையோ இளஞ்செடியாகி, வேகமாக வளர்ந்து வருவதையும் இவர் பார்க்கத் தவறவில்லை.

இத்தனை பிரார்த்தனை, இத்தனை அக்கறை வேண்டியவைகளை அவ்வப்போது அளித்தும் எனது செடி வளரவில்லை செழுமைகுன்றி விட்டதே! ஏன்? ஏன்? என புலம்பினார். குமுறினார். குழப்பத்தோடு, பக்கத்து குகைத் துறவியை அணுகி எனது செடிமட்டும் வாடிப்போயிற்றே, ஏன்? நீங்கள் என்ன செய்தீர்கள் நான் என்ன செய்ய வேண்டும் என வருத்தம் மேலிட வினவினார்.

இவை, இரண்டுமே நமது செடிகளல்ல. ஆண்டவனுடையவை. நமது தேவை ஆலீவ்மரம், நான் அவனிடத்தில் இங்கே ஆலிவ் மரம் அருள வேண்டும் என்று மட்டும் தான் கேட்டேன். ஆலிவ் மரம் வளர்ந்து விடும் என்ற நம்பிக்கை மட்டும்தான் என் உள்ளத்தில் இருந்தது, இருக்கிறது என அமைதியாக பதில் அளித்தார்.


முதல் துறவிக்கு சுரீர் எனத் தெளிவு பிறந்தது. நமது ஆசைகள், விருப்பங்கள், அத்தனையையும் அவ்வப்போது ஆண்டவனிடத்தில் சமர்ப்பித்தவண்ணம் இருக்கிறோம்.

அளவான ஆற்றல் உள்ள நாம் அளவற்ற ஆற்றல் உள்ள அவனிடத்தில் வேண்டுதல் வைக்கும் போது அது நிபந்தனையற்றதாக இருக்க வேணும் என்பது முக்கியம்.

என்ன வேண்டும் என்று கேளுங்கள். விவரியுங்கள் விஸ்தாரமாக உரத்தகுரலில் சமர்ப்பியுங்கள். நாம் கேட்பது விரும்பியது விண்ணப்பித்தது நடக்கும் என்று நம்புங்கள் கிடைத்திடும் என்று நம்புங்கள்.

எப்போது நடக்கும்? ஏன் இன்னும் நிகழவில்லை எனும் கேள்விகள் மட்டும் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டியவை. நடக்கும், கிடைத்திடும் என்று மட்டும் உறுதியாக நம்புங்கள்.

முயற்சி மேற்கொள்வதை தளர்த்தவே கூடாது. இது சாத்யமா? என்று கேள்வி கேட்டுக்கொண்டே இந்த சமுதாயம் உன்னத நிலையை தவற விட்டுக்கொண்டிருக்கிறது. பேராற்றல் உங்களை, நம்மை இந்த பிரபஞ்ச ரகசியங்களை கொஞ்சம் கொஞ்சமாக புரியவைத்து நம்மை உயர் நிலைக்கு கொண்டு செல்கிறது என்பதை மட்டும் நம்புங்கள், நலமேவிளையும்.



கல்பட்டு அய்யாவுக்கு அன்னம் பாலிக்கும் வள்ளல் பெருமான்

**என்றே என்னினும் இளமையோடிருக்க**
**நன்றே தரும் ஒரு ஞானமா மருந்தே!**

# புகழ்த்துறவு

துறவுகளில் சாலச்சிறந்தது உன்னதமானது புகழ்த்துறவு. புகழைத் துறப்பதா? இசைபட வாழ்தல் பற்றியும், தோன்றினால் புகழோடு மட்டுமே தோன்றுக என்றும், வள்ளுவரே சொல்லிய பிறகும் புகழைத் துறப்பது பற்றிய எண்ணம் எதற்கு?

புகழில் இரண்டு வகை உண்டு. போதைதரும் புகழ். ஊக்குவிக்கும் புகழ். இரண்டினையும் சற்று விரிவாக விவாதித்தால், புகழ்த்துறவின் அவசியமும், நன்மைகளும் நன்கு விளங்கும்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று** – குறள் 236

வள்ளுவர் சுட்டிக்காட்டும் இந்த புகழின் பொருள் யாது? ஊருக்கு நன்கு அறிமுகமான ஒருவனாக, தோன்ற விரும்பினால் பல நற்செயல்களைச் செய்தவன்! செய்கிறவன் எனும் பெயரோடு, உடன் தொடரும் பாராட்டுகளாகிய புகழோடு, தோன்றுக! உலவுக. அஃதிலார், சாமான்யனாக, எதையும் சாதிக்கும் திறனற்றவனாக, கூட்டத்தில் ஒருவனாக, இருந்துவிடு.

**விரும்பத்தக்க புகழ். ஊக்குவிக்கும் புகழ்.** இந்தப்புகழை அளிப்பவர்கள் நேர்மையையும், தூய்மையைம் நன்கு அறிந்தவர்கள். உணர்ந்தவர்கள். ஆகவே இந்தப்புகழுக்கு உரியவர்கள் ஊக்கு விக்கப்படுவார்கள். தொடர்ந்து அவர்கள் பணிவோடு பணிகளில் ஈடுபடுத்திக் கொள்வார்களே தவிர, புகழ்ப்போதையில் மயங்கி செய்யாதன செய்யார்.

புகழ்த்துறவு என்பது தான் என்ன ? புகழுரைகளை ஏற்க மறுப்பதா ? இல்லை, புகழைப் பறைசாற்ற செய்யப்படும் ஆடம்பரச் செய்கைகளை, வெகுமதிகள்! மலர்கீரிடம், மலர்மாலை! அரண்மனை கொலுமண்டபம் போன்ற மேடை அமைப்பு! அலங்காரவளைவுகளை! ஆயிரமாயிரம் கொடிகள்! குழல்விளக்குகள்! ஆயிரம் கார்கள் பவனி! இவைகளெல்லாம் போதையூட்டும் புகழ்ப்பணிகள்தானே! இவைகளைத் துறப்பதைத்தான் புகழ்த்துறவு என்கிறேன்.

இவைகள் யாவும் : பயன் ஏதும் விளைவிக்காத (பயன் விளைவதாக வாதிட்டாலும்) அவை நிச்சயம் தற்காலிகப் பயன்களே ! மக்களை மயக்கவைக்கும் உக்திகள் தான்) நான் கொடுப்பவன்! நீ கையேந்துபவன்

என்பதைக் கூறாமல், தொண்டர்களே விரும்பிச் செய்திடுவதாக தோன்ற வைத்திடும் மெஸ்மெரிஸம். மனம் மயக்கும் நிலை.

அரசர்களையே நெறிப்படுத்தும் (அ) நல்வழிப்படுத்தும் வல்லமை பெற்றிருந்த அன்றைய சங்ககாலப் புலவர்கள் புகழை ஊக்குவிக்கும் மருந்தாக ஏற்றார்களே தவிர, போதைதரும் செருக்காக ஏற்கவில்லை,

பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி சூதாட்டத்தில் அனைத்தையும் தோற்று நின்ற தர்மரைத் துணிச்சலாகச் சாடுகிறான்.

**நாட்டுமாந்தரெல்லாம், நரர்களென்று கருதார்**
***ஆட்டுமந்தையா மென்றுலகை***
***அரசர் எண்ணி விட்டார்***

இன்றைய நிலையும் ஏறத்தாழ அப்படித்தானே இருக்கிறது.

இன்றைய அரசியல்வாதிகளில் பலரும்! மதவாதிகளில் சிலரும் புகழ்தரும் போதையிலே மயங்கித் தள்ளாடுகிறார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்படாத உண்மை. இத்தகையோரின் புகழ்த்துறவு நாட்டின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கும்.

சீடனோ, தொண்டனோ, தெளிவு பெற வேண்டும் என்பது தானே தலைவனின் நோக்கமாக இருக்க வேண்டும். மாறாக, மயக்கத்தில் மூழ்கடிக்க வைக்கும் பணிகள்தானே, பரவலாக நடந்து கொண்டுள்ளது.

***"பெரியோர் எனின் வியத்தலும் இலமே***
***சிறியோர் எனின் இகழ்தல் அதனினும் இலமே "***

புறநானூற்றுப்பாடலின் இறுதி வரிகள் இவை. எத்தனை கருத்துச் செறிவான வாழ்வியல் பாடம் !

"எல்லாப்புகழும் இறைவனுக்கே" என்கிறது இஸ்லாம். புகழுக்கு உரியவனாக உன்னை ஆற்றுப்படுத்துகின்ற பேராற்றல் இறைவன். இந்த உண்மையை நம்புகிறவன், ஏற்றுக்கொள்கிறவன் அனைத்துப்புகழையும் அவனுக்கல்லவா அர்ப்பணிக்க வேண்டும்.

பலரால் அறியப்படுதலும்! பாராட்டப்படுதலும் தானே புகழ்.

பலருக்குப் பயன்தரும் பழுமரமாக, பலருடைய தாகத்தை தீர்த்திடும் ஊருணி நீராக, பலருடைய பசி போக்கிடும் அக்ஷய பாத்திரமாக ஒருவன் வாழ முற்படுவது புகழ்பெற்றிடும் நோக்கத்தோடு அல்ல. பிறருக்கு உதவிட வேண்டும். எல்லோரும் சமநிலை எய்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் !

அவனுடைய குறிக்கோள் புகழ் அல்ல, அவனுடைய இலக்கு பட்டினியில்லா பாரதம்... நோயில்லா சமுதாயம்... குற்றமற்ற சுற்றம்.

எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற இந்த வையம்

**கல்லாரை காணுங்கால் கல்வி நல்கா**
**கசடற்கு தூக்குமரம் ஆங்கே உண்டாம்**

என ஆவேசமாக முழங்கினார் பாவேந்தர் பாரதிதாசன். இந்த வையம் அவர் விரும்பிய இலக்கு நோக்கி நடக்க வேணுமென்றால் புகழ்த்துறவு அவசியம், மிக அவசியம்.

சமநோக்கு அவசியம். எளிய வாழ்வு. தேவைக்கு மட்டும் செல்வம். இவைகள் அவசியம் மிக அவசியம்.

மக்களை புகழுக்காகவே திட்டமிட்டு பணிகளை மேற்கொள்பவர், மன நிறைவுக்காகவே, எளியோரை ஆற்றுப்படுத்துபவர் என இருபெரும் வகையினராகப் பிரிக்கலாம்.

முன்னவர் புகழுக்காகவே வாழ்பவர், பின்னவர் புகழை துறக்க வல்லவர்கள். அத்தகு சிலர் நம்மிடையே வாழ்ந்து மறைந்து விட்டார்கள். சற்று நினைவு படுத்திப்பார்ப்போமா?

வள்ளலார்! காந்திஜி! இராமகிருஷ்ண பரமஹம்ஸர்! ஷீர்டி சாய்பாபா! விவேகானந்தர்! அன்னை தெரஸா. இந்த வரிசையில் இன்னும் எத்தனை எத்தனையோ மகானுபாவர்கள் இந்த கை கொடுப்பதை அந்த கை அறியாவண்ணம் நற் செயல்களை ஆற்றிய வண்ணம் உள்ளனர். உண்மை!!

**அவர்களால் தான் இந்த உலகம் இன்னும் இயங்கிக் கொண்டுள்ளது.**

தலைவன், தொண்டனை தன் நிலைக்கு உயர்த்த முயற்சி மேற் கொள்வது தர்மம்? அன்றி தான் தலைவனாகவும்! தருபவனாகவும் தொண்டன் தாழ்ந்து வணங்கிப் பெறுவனாகவும் இருக்கச் செய்வது விவேகமா ? புகழை வழங்குகிற நாம்கூட போதை தரும் புகழை வழங்குதல் தவிர்த்து! ஊக்குவிக்கும் புகழை மட்டும் தகுதி! திறன் ஆய்ந்து அளித்திடல் நலம்.

சோழன் குலோத்துங்கனின் பிறந்த நாள். கொலு மண்டபத்தில் வீற்றிருக்கிறான் மன்னன். ஒருவரோடு அடுத்தவர் போட்டி

போட்டுக்கொண்டு எண்ணற்ற புலவர்கள் வரிசையில் நின்று புகழ் மாரி பொழிகிறார்கள்.

அவைக்கள புலவர்களில் ஒருவரான ஔவையார் அமைதியாக அமர்ந்து அனைத்தையும் கேட்டவண்ணம் உள்ளார்.

ஔவையாரின் மவுனம் மன்னனின் அமைதியைக் குலைத்தது, அன்னையே தங்களுடைய வாழ்த்துப் பெற ஆவலாய் இருக்கிறேன். தாங்களோ, அமைதியாக இருக்கிறீர்களே? எனக்கனிவாக தனது விருப்பத்தை வெளியிட்டான் மன்னன்.

ஔவைப் பாட்டி, மலர்ந்த முகத்தோடு எழுந்தாள். மன்னனை அன்பொழுக நோக்கி " **வரப்புயர** " எனும் ஓர் அமுத வார்த்தையை உதிர்த்து அமர்ந்தார்.

அவையினர் வியப்பில் ஆழ்ந்தனர். அரசனே திகைப்பில் கலக்கமுற்றான்.

ஔவையின் இந்த வார்த்தைக்கும் ஏதோ அர்த்தம் இருக்க வேண்டும் என்பது மட்டும் மன்னனுக்கு தெளிவாயிற்று.

வாழ்த்துக்களை எதிர்பார்த்த எனக்கு இந்த வார்த்தையில் பொதிந்துள்ள பொருள் விளங்கவில்லையே! விளக்குங்கள் அன்னையே என விண்ணப்பித்தான் மன்னன்.

ஔவை அருளினாள் :

**வரப்புயர! நீர் உயரும்**
**நீர் உயர! நெல் உயரும்**
**நெல் உயர! குடி உயரும்**
**குடி உயர! கோன் உயரும்**
**புகழை அளிப்பதிலும்!**

புகழைப் பெறுவதிலும் எத்தனை பண்பாடு!!

**சபைஎன துளம் எனத் தான்அமர்ந் தெனக்கே**
**அபயம் அளித்ததோர் அருட்பெருங்ஜோதி!**

# அற்புதங்கள்

அற்புதங்கள் என நாம் அடையாளங்கண்டு ரசிப்பவை, பாராட்டி மகிழ்பவை யாவை?

ஒரு சராசரி மனிதன் தனது அறிவாலும், ஆற்றலாலும் உருவாக்கிடும் ஒரு படைப்பை, ஆற்றிடும் அருஞ்செயலை அற்புதம் என அடையாளம் காண்கிறோம் அல்லவா?

ஆனால், இயற்கை நிகழ்த்தியிருக்கிற அற்புதங்களைப் பற்றியோ நிகழ்த்திக் கொண்டிருக்கிற – நிகழ்த்தப் போகிற அற்புதங்கள் பற்றியோ அறிந்து கொள்ளவோ, புரிந்து போற்றிடவோ, நம்மவரில் எத்தனைபேர் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இயற்கை ஆர்வலர்கள் எண்ணிக்கையில் மிக மிக குறைந்தவர்களாகத்தான் இருப்பது, கசப்பான உண்மை.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என மகிழ்ச்சி மிகுதியாய் மனம் நெகிழ்ந்தான் மகாகவி பாரதி.

இயற்கை வழங்கிடும் அத்தனை அற்புதங்களையும் இறைவன் வழங்கிடும் இன்பங்களாகப் பார்த்துப் பரவசப்பட்டான்.

ஒரு கோடி அல்ல, எத்தனையோ கோடி இன்பங்களை இயற்கை வழங்கியுள்ள அற்புதங்களிலே கண்டு களித்திட்டார் மகாகவி பாரதியார்.

நாம் ஒரு பத்து இன்பங்களையாவது நுகர்ந்தோமா? அனுபவிக்கிறோமா? ஆனந்திக்கிறோமா? சற்று சிந்திப்போமா?

இயற்கை வழங்கிக் கொண்டிருக்கும் அற்புதங்கள்

காலைக்கதிரவன் உதயக்காட்சி,மாலையில் ஆதவன் மலைமுகட்டில் மறைந்திடும் காட்சி, மேகங்களின் ஊர்வலம் வானவில்லின் வண்ண ஜாலங்கள், சொக்க வெள்ளிப் பாற்குடம் போன்ற முழு நிலவு, இருள் கவிந்த இரவில் வானத்தில் கண்சிமிட்டும் விண்மீன்கள், மங்கலாக, பிரகாசமாக ஒளி உமிழும் விண்மீன்கள், கூட்டமாகவும் தன்னந்தனியாகவும் அவை மின்னும் மாட்சி, வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று என விடியலை வர்ணிக்கிறாளே ஆண்டாள், அந்த வெள்ளியின் பிரகாசம், கடலின் ஆர்பரிப்பு, அலைகள் ஓயாமல் கனாயை நோக்கி ஆக்ரோஷமாக வருவதும், பூமித்தாயை தாழ்ந்து வணங்கி பின்வாங்கி மெல்ல நகர்வதும், விசும்பி துளி, பெருமழையாகப் பெய்வதும்,

சாரலாக, தூற்றலாக இதம் தருவதும், அச்சுறுத்தும் இடி முழக்கங்களும், அதற்கு முன் அறிவிப்பாக கண்ணைப் பறித்திடும் மின்னல் ஒளியும், கண்ணுக்கெட்டிய தூரம் பசுமையும், இதமாக வீசுகின்ற தென்றலும், சுழன்று, சுழன்று அடித்திடும் சூறாவளியும், மலைமுகட்டிலிருந்து கொட்டுகின்ற நீர்வீழ்ச்சிகளும், தாமரைத் தடாகங்களும், நூற்றுக்கு மேற்பட்ட வண்ணங்களில், வடிவங்களில் மலர்களும், அறுசுவைக்கனி வகைகளும், எண்ணற்ற தாவரங்களும், ஏன், நமது வீட்டுத் தோட்டத்திலேயே காணப்படுகின்ற தென்னை, மா, வாழை, கொய்யா சப்போட்டா, மாதுளை என எத்தனை வகை காய்கனி தாவரங்கள், அருகருகே வளர்ந்தாலும் வெவ்வேறு வடிவமும், வண்ணமும் சுவையும் கொண்டதாகவும், ஒரு பத்து சதுர அடி பூமிப்பரப்பில் எத்தனை வகையான புல், பூண்டு, சிறு செடிகள் அவைகளின் இலைகள் வடிவமைப்பில் எத்தணை வேறுபாடுகள்!!

எத்தனை வகை ஜுவராசிகள், சிறிதும், பெரிதுமாக எறும்புகளில்தான் எத்தனை வகை? புழு, பூச்சிகளில் எத்தனை வகை? பறப்பனவற்றில் பட்டாம்பூச்சியிலிருந்து, கழுகு, இராஜாளி என எத்தனை வகை? நாடுவிட்டு நாடு, கண்டம்விட்டு கண்டம் பறந்து உலகையே வலம்வரும் பறவைகள்!!

விலங்குகளில்தான் எத்தனை வகை? பிரம்மாண்டமான யானை–மிகமிகச் சிறியதான சுண்டெலி!!

இன்னும் அறியப்படாமலே இருக்கும் எண்ணற்ற பிரபஞ்ச ரகசியங்கள் என நினைவுப்பாதையிலே பயணம் நீண்டுகொண்டே இருக்கும்.

இறுதியாக, **இயற்கை வழங்கியுள்ள இன்னோரு அற்புதம் மனிதன்.**

மனிதர்களின் தோற்றத்தில் மட்டுமா, நிறத்தில் மட்டுமா வேறுபாடு? உணர்வுகளில்தான் அதிமுக்கியமான வேறுபாடுகளை விதைத்து, அற்புதங்களிலேயே அதிமுக்கியமான அற்புதமாக மனிதனை வழங்கியுள்ள இயற்கையே! இறையாற்றலே!! விந்தைகளின் ஊற்றே! ஊழி முதல்வனே! எங்கள் வள்ளல் பெருமானுக்கு அற்புதக் காட்சி தந்த அற்புதமே!

இப்படியெல்லாம் உன்னை ஏத்தி மகிழ்கிற மனிதரில் பலர், அற்புதங்களை ரசிப்பதாலோ, பாராட்டுவதாலோ என்ன பயன் என்று வினவுகின்றனர்.

நிச்சயமாக பயன் உண்டு.

வானத்தை உற்றுப்பார்த்து ரசித்தவன்தான் வான சாஸ்திரம் எழுதினான்.

இயற்கை நிகழ்த்தும் அற்புதங்களை உற்றுப் பார்த்தவன்தான் பஞ்சபூதங்களை அடையாளங்கண்டான்.

இன்று மனிதன் நிகழ்த்திக் கொண்டிருக்கிற நிகழ்த்தி முடித்த, நிகழ்த்தப் போகிற அத்துனை விஞ்ஞான அற்புதங்களும் இயற்கை நிகழ்த்தும் அற்புதங்களை ரசித்ததனால் மட்டும்தான். பிரபஞ்ச இரகசியங்களின் முடிச்சுகளை மனிதன் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடைகாண்பது, காண முயன்று கொண்டிருக்கிறானே எப்படி? இயற்கை காட்டும் வழியினை உறுதியாகத் தொடர்கிறவன்தான் இன்றைய விஞ்ஞானி.

அற்புதம் நிகழ்த்திய ஒரு சிறுமியின் உண்மை நிகழ்வைச் சொல்லி கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

இலண்டன் மாநகரின் புறநகர்ப்பகுதி, வறியநிலையில் வாழ்வை நகர்த்தும் ஒரு பெற்றோருக்கு இரண்டு மக்கட் செல்வங்கள். பத்து வயதில் ஒரு பெண் குழந்தை, ஏழு வயதில் ஒரு ஆண் மகவு. அக்காவும், தம்பியும் ஒன்றாக பள்ளிக்குச் செல்வார்கள். பத்திரமாக தம்பியை அழைத்து வரும் அக்காவைப் பார்த்து அம்மா பூரிப்பாள்.

வசதிகள் குறைவாக இருந்த போதிலும், குறையற்ற அன்பு அவர்களை குதுாகலமாகவே வாழ வைத்து. எளிமையிலேயே இனிமை இழைந்த அவர்கள் வாழ்வு நகர்ந்து கொண்டிருந்தது.

பள்ளியிலிருந்து திரும்பியதும் அக்காவும், தம்பியும் வீட்டருகே விளையாடிக் கொண்டிருப்பது வழக்கம். நன்றாக விளையாடிக் கொண்டிருந்த தம்பி, சற்று சோர்வடைய ஆரம்பித்தான். ஒருசில நாட்களில் சோர்வுமிகுதியால் வீட்டுக்குச் சென்று படுத்துக் கொள்வான்.

அக்கா, தம்பியின் சோர்வு பற்றி பெற்றோருக்கு தெரிவிக்க, அவர்கள் அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல இப்படி சில மாதங்கள் சென்றன.

மருத்துவமனைக்கு பலமுறை சென்று வந்தும் உடல்நலனில் பின்னடைவுதான். குழந்தை பலஹீனமானான்.

ஒருநாள், மதியம் தம்பியை மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்றிருந்த பெற்றோர் மிகுந்த கலக்கத்தோடு, தம்பியைத் தூக்கிக் கொண்டு வீடு திரும்பியதைக் கண்ட அந்த சிறுமி ஒரு மூலையில் உட்கார்ந்து தேம்பி தேம்பி அழுதாள்.

தம்பியை படுக்கவைத்த பெற்றோர், மெல்லிய குரலில் பேசிக் கொண்டதை, அச்சிறுமி கேட்க நேர்ந்தது.

அப்பா, சொன்னார் ( Only a Miracle could save our son) ஏதாவது ஒரு அற்புதம்தான் நம் குழந்தையை இனி காப்பாற்ற வேண்டும். மருத்துவர்கள் கைவிரித்துவிட்டார்கள் போலும்!

விருட்டென எழுந்த சிறுமி, தனது சேமிப்பு உண்டியலை எடுத்து கொட்டிக்கவிழ்த்து கைநிறைய சில்லறை நாணயங்களை அள்ளிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக, அடுத்த தெருவிலிருந்த மருந்து கடைக்கு விரைந்து சென்றாள்.

“Unlce, Uncle, Kindly give me a Miracle” என்று அழுகைக்கிடையே சொல்லி முடித்தாள். அத்தனை நாணயங்களையும் மேஜை மீது வைத்தாள். “Please give ma a Miracle” என்று கெஞ்சினாள், கதறி அழுதாள்.

கடை உரிமையாளர் குழம்பித் தவித்தார். குழந்தாய், எங்களிடம் “ Miracle” கிடையாது. அது வேறு எங்கேயும் கூட கிடைக்காதே! நீ என்ன கேட்கிறாய்? ஏன் அழுகிறாய்? என்று ஆறுதலாகப் பேசினார்.

அந்தக்கணம், மரியாதைக்குரிய தோற்றமுடைய ஒரு கணவான் உள்ளே நுழைகிறார். அங்கு நடந்து கொண்டிருக்கும் காட்சிகளைக் காண்கிறார். ஒரு நிமிடத்தில் நிலைமையைப் புரிந்து கொள்கிறார்.

இப்போது, அந்தச் சிறுமியை அன்பொழுகப் பார்த்து “Why do you need a MIRACLE, my Child” என்று வினவுகிறார்.

எனது தம்பியை காப்பற்ற வேண்டும் “Only a MIRACLE could save our child” என எங்கள் பெற்றோர் பேசிக் கொண்டதைக் கேட்டேன் என அழுதுக் கொண்டே சிறுமி சொன்னாள்.

வந்தவர், இலண்டன் மாநகரத்து பிரபல மருத்துவமனையில் பணியாற்றும் நரம்பியல் நிபுணர். புகழ்பெற்ற Specialist.

குழந்தாய், நீ கேட்கிற “Miracle” ஒருவேளை என்னிடத்தில் இருக்கிறதா என்று பார்க்கிறேன். ஆனால் நான் முதலில் உன் தம்பியைப் பார்க்க வேண்டும், அழாதே, தனது காரில் அந்த சிறுமியை அழைத்துச்

சென்றார். தங்கள் வீட்டிற்கு, தங்கள் மகள் அழைத்துவரும் நபரைப் பார்த்தவுடன் அந்த வறிய பெற்றோர் ஆச்சர்யத்தில் வாயடைத்து நின்றனர். அவர் யாரென்று அவர்கள் அறிவார்கள்.

அந்த சிறுவனை பரிசோதித்த நரம்பியல் நிபுணர், பெற்றோரைப் பார்த்து, குழந்தையை காரில் ஏற்றுங்கள் எனப் பணித்தார்.

குழந்தைக்கு உடனடி அறுவை சிகிச்சை செய்யப்பட்ட சில நாட்களில் குணமாகி தம்பி வீடு வந்தான். இப்போது மீண்டும் அக்காவும், தம்பியும் ஒன்றாக பள்ளிக்குச் செல்கின்றனர்.

அந்தச் சிறுமி “Miracle” ஐ வாங்கி தம்பியைக் காப்பற்றுவேன் என்று உறுதியோடு முயற்சித்தாள். நரம்பியல் நிபுணர் மூலமாக “Miracle” நிகழ்ந்தது.

**அற்புதங்கள் நிகழ்த்த அடிப்படை தேவை உறுதியான நம்பிக்கை, தளராத முயற்சி, இடையறாத வேட்கை.**

**முதற்கண் அற்புதங்களை ரசிக்க, பாராட்ட பழகுவோம். நிச்சயமாக நம்மாலும் அற்புதங்களை நிகழ்த்த இயலும், நம்புங்கள், நிகழ்த்துங்கள்...**



ஏழு திரைகளை நீக்கி தைப் பூச ஜோதி தரிசனம், வடலூர்

# வள்ளலார் கேட்ட வரம்

வரம் கேட்க தயங்குவோரும், வரம் பெற விரும்பாதோரும் இருப்பார்களா? என எண்ணிப் பார்த்தேன்.

அக்கால முனிவர்கள், தவசிரேஷ்டர்களாகிய பராசுரர், பரத்வாஜர், பரசுராமர், விசுவாமித்திரர், ஜமதக்னி, ரிஷ்யசிருங்கர், வசிஷ்டர், அகத்தியர் என எத்தனை எத்தனை மகரிஷிகள் பற்றியும் அவர்தம் தவவலிமை பற்றியும் நமது இதிகாசங்களும், புராணங்களும் மிக விரிவாகவே விரித்துரைக்கின்றன.

கானஞ்சென்று கடுந்தவமியற்றி அரிய பல வரங்கள் பெற்றவர்கள் முனிவர்கள் என்று அறிகிறோம்.

பெறற்கரிய வரம் பல பெற்றவர்கள், முனிவர்கள் மட்டுமல்ல இராவணன். இரணியன், இரண்யாட்சன், பஸ்மாசூரன், நரகாசூரன், கம்சன் என அசூரர்களும் கடுந்தவமியற்றி பற்பல சாமர்த்தியமான, சாதுர்யமான வரங்கள் பெற்று அட்டூழியங்கள் புரிந்தனர் என்றும், அளவற்ற அக்ரமங்களை தாங்கிட முடியாமல் தவித்த தேவர்களும், முனிவர்களும் முறையிட, கடவுளர்கள் அவதாரம் செய்து இந்த அசுரர்களை வதம் செய்திட்டார்கள் எனவும் நமது புராணங்கள் பேசுகின்றன.

ஆக வரம் பெற்றிட, வெவ்வேறு குணாதிசயங்கள் கொண்ட இவ்விரு தரப்பினரும் (அசுரர்களும், முனிவர்களும்) கையாண்ட முறை தவமியற்றல், கடுந்தவம் புரிதல்.

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்** – குறள்

முனிவர்கட்கும், அசுரர்கட்கும் மிகவும் பிற்பட்ட காலத்தவராகிய வள்ளுவரும், வேண்டிய வரங்கள் பெற தவமியற்றல்தான் வழி என்று உறுதிப்படுத்தினார்.

அண்மையில் சென்ற நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து வழிகாட்டி மறைந்திட்ட மாமனிதர்கள் இருவர் கேட்ட வரங்கள் பற்றி சிந்திப்போம்.

காணிநிலம் வேண்டும் என்று கேட்ட மகாகவி, விநாயகரிடம் வரம் கேட்கிறான். அவரது விநாயகர் நான்மனிமாலை நூலிலிருந்து ஒரு பாடல்.

அவர் கேட்கும் வரம் நம்மை சிந்திக்க வைத்திடும்.

**மண்மீதுள்ள மக்கள், பறவைகள்,**
**விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்**
**யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே**
**இன்பமுற்று, அன்புடன் இணங்கி வாழ்திடவே**
**செய்தல் வேண்டும் தேவ, தேவா!!**

**ஞானகசத்து நடுவே நின்று நான்**
**பூமண்டலத்தில் அன்பும் பொறையும்**
**விளங்குக துன்பமும் மிடிமையும் நோயும்**
**சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம்**
**இன்புற்று வாழ்க என்பேன் இதனை நீ**
**திருச்செவிக் கொண்டு திருவுளமிரங்கி**
**அங்ஙனே ஆகுக என்பாய், ஐயனே!**
**இந்நாள்,இப்பொழுது எனக்கிவ் வரத்தினை அருள்வாய்!**

– சுப்பிரமண்ய பாரதியார்

பாரதி கேட்ட வரத்தை, இன்னுமொரு முறை நிதானமாகப் படியுங்கள். வார்த்தைக்கு வார்த்தை நிறுத்திப் படியுங்கள். உள்ளமெல்லாம் ஒரு நல்லுணர்வு வியாபிக்கும்.

பாரதிக்கு கொஞ்ச காலம் முன்பு வாழ்ந்தவர் நமது வள்ளலார். ஒருமையுடன் நினது திருமலரடி நினைத்திடும் உத்தமர் உறவை நாடிய வள்ளலார், உயர்க்கு உறுகண் செய்யாது வாழ்ந்து காட்டிய வள்ளலாரும் ஓர் வரம் வேண்டினார். அவர் வார்த்தைகளை அப்படியே படிப்போம்.

**மண்ணுலகத்திலே உயிர்கள் தாம் வருந்தும்**
**வருத்தத்தை ஒரு சிறிதெனினும்**
**கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்**
**கணமும் நான் சகித்திட மாட்டேன்**
**எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்**
**இசைத்த போது இசைத்த போதெல்லாம்**
**நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கும் நல்**
**வரந்தான் நல்குதல் எனக்கிச்சை எந்தாய்!!** – திருஅருட்பா

பாடலை படித்து முடித்தீர்களா? அவர் கேட்ட வரம்யாது? உயிர்கள்தாம் வருந்தும் வருத்தம் சிறிதெனினும் நினைத்த மாத்திரத்தில், நினைத்த வண்ணமே அவ்வருத்தம் தவிர்க்கும் வல்லமையை வரமாகக்

கேட்கிறார். மனிதநேயத்தின் இமய உச்சியைத் தொடுகின்ற உணர்வல்லவா இது!!

மகான்கள் கேட்ட வரம் அறிந்தோம். தொடர்ந்து, தற்கால மனிதர்களில் சிலர் கேட்க விரும்புகிற வரங்கள் பற்றியும் தெரிந்து கொள்வோமா?

**ஓர் உண்மை நிகழ்வு...**

ஐம்பதுக்கும் மேற்பட்ட கார்பரேட் தொழில் அதிபர்கள் கலந்து கொண்ட ஓரு நிகழ்ச்சி சில ஆண்டுகட்கு முன், அமெரிக்கப் பெருநகர் ஒன்றில் நடந்தது.

இங்கே, இப்போது உங்கள் முன்னே கடவுள் தோன்றி, ஒரு வரம் தருகிறேன். ஒன்றே ஒன்றுதான் என்று கூறினால் நீங்கள் என்ன வரம் கேட்பீர்கள். ஒரு வரம், அதுவும் ஒரே வரியில் இருக்க வேண்டும் என்பதுதான் அந்த வினா.

அரங்கில் அமர்ந்திருந்தோர் அத்தனை பேரும் அறிவும், ஆற்றலும் மிக்கோர். தொழில் சாம்ராஜ்யத் தலைவர்கள்.

ஒவ்வொருவரிடமும் ஒரு துண்டுக் காகிதம் தரப்பட்டது. அவர்கள் வேண்டுகின்ற வரத்தை எழுதிடுமாறு கோரப்பட்டனர். அவ்வண்ணமே எழுதினர். அத்தனை சீட்டுக்களையும் சேகரித்து, ஒவ்வொன்றாக படித்து முடித்த பேச்சாளர் வியப்பின் எல்லைக்கே சென்றார்.

உலகின் தரம், நிச்சயமாக உயரும் இது உறுதி என உரக்கச் சொன்னார். அந்த சிறப்பு விருந்தினர். அத்தனை பேரும் ஆவலாக அவரையே நோக்கினர்.

நீங்கள் அத்தனை பேரும் கடவுளிடம் கேட்கும் வரம் “We want Quality People” இந்த ஒரு வரியைத்தான் நீங்கள் அத்தனை பேரும் எழுதியிருக்கிறீர்கள்.

தரமுள்ள மனிதர்களைத் தாரும் என்பதுதான் நீங்கள் கேட்கும் வரம் என்பதறியும் போது எவ்வளவு நிறைவாக இருக்கிறது தெரியுமா? தரமுள்ள மனிதன் மட்டுமே இந்தத் தரணியை நிரப்புகிறார்களென்றால், அத்தனை தேவைகளும் தடையின்றி நிறைவேறிடும் அல்லவா? என்று தன் சிறப்புரையை நிறைவு செய்தார். இந்த வரம் கேட்டிட நமக்கும் விருப்பந்தானே?

## அடுத்து, ஒரு சுவையான கற்பனை...

"For a Change" இறைவன் பக்தர்கள் மீது பரிவு கொண்டு ( அந்தக் காலத்து அரசர்கள் மாறு வேடத்தில் நகர்வலம் வருதல் போல்) தானே முன்வந்து, ஒரு சிலருக்கு வரம் அளித்துப் பார்க்க விரும்பினாராம்.

பரிக்ஷார்த்தமாக இருவரைத் தேர்ந்தெடுத்தார். அவர்கட்கு காட்சி அளித்த இறைவன் சொன்னாராம். ஒரு வரம், ஒரே வரம் அதுவும் ஒரே வரியில் அடங்கும் ஒரு வரம் கேளுங்கள். யோசித்து வையுங்கள். நாளை வருகிறேன். என்று கூறிவிட்டு மறைந்தாராம்.

இரவு முழுவதும் சிந்தித்தனர். என்ன வரம் கேட்பது? ஒரு வரம் – அதுவும் ஒரே வரியில் இருந்திடல் வேணும். இறைவனே தேர்வு செய்தவர்களல்லவா? Intelligent புத்திசாலித்தனமாக யோசித்தார்கள்.

மறுநாள் முதல் குடும்பத்தார் முன் இறைவன் காட்சியளித்தார்.

**கருணைக்கடலே எந்த இல்லத்திலும் அழுகைக் குரலே ஒலிக்கக் கூடாது வரமளியுங்கள்** பிரபு என்று இறைஞ்சினர்.

அழுகை ஓலம் தவிர்க்கப்பட்டாலே போதுமா? என்று வினவினார். ஆண்டவர்.

நோயினால் அழுகை, பசி, பட்டினியால் அழுகை, பகையாளிகளின் வன்முறையினால் அழுகை, விபத்துக்களால் அழுகை, போரினால் அழுகை அகால மரணத்தால் அழுகை இத்தகு கொடுமையான அழுகை ஓலம் இல்லையெனின்... என்று அவர்கள் முடிப்பதற்குள் மலர்ந்த முகத்தோடு, தான் தேர்ந்த அடுத்த இல்லத்திற்கு விரைந்தார் ஆண்டவர்.

சொன்ன படியே காட்சி தந்த இறைவனைக் கண்டதும், அந்த இரண்டாவது குடும்பத்தின் மூத்த குடியான ஓர் மூதாட்டி, தங்கள் வேண்டிய வரத்தை ஓரே வரியில் சொல்லி முடித்தாள்.


வரு விருந்து ஓம்பல் எங்கள் குடும்பத்தாரின் நிரந்தரக் கடமையாக இருக்க வேண்டும். இதுவே நாங்கள் விரும்பும் வரம். அருளுங்கள் ஆண்டவரே!

இரண்டு குடும்பத்தாரின் சாமர்த்தியமான சாதுர்யமான

விண்ணப்பங்களைக் கேட்ட கருணைக்கடல் மனித நேயம் மாய்ந்து விடவில்லை. மலரத்தான் செய்கிறது. இப்போதைக்கு இனி ஒரு அவதாரம் தேவையில்லை மனிதர்கள் மாமனிதர்களாக முயற்சி மேற்கொள்கிறார்கள் எனத்திருப்தியும் நிறைவும் அடைந்தாராம். அந்தமும் ஆதியுமில்லா ஜோதி வடிவினன்.

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**


ஸ்ரீ கிருபானந்த வாரியார்


ஓமந்துார் ராமசாமி ரெட்டியார்

தீபநெறி : இலவச தமிழ் மாத வண்ண இதழ் வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் வெளியீடு ஆன்மிகத் தேடல் உள்ளவர்கள் சமுதாய தொண்டுள்ளம் கொண்டவர்கள் இதழை பெற / இதழை பிறருக்கு தர தொடர்பு கொள்ளவும் 94440 73635